




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 191 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 191 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(22-02-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-10
பிறை: வளர்பிறை
திதி
பஞ்சமி நண்பகல் 12.17 வரை பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
அசுவினி இரவு 6.55 வரை பிறகு பரணி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் - மேற்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | ஜெயம் |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | சுபம் |
| கடகம் | உயர்வு |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | அமைதி |
| துலாம் | புகழ் |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | புகழ் |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | வரவு |
| மீனம் | கீர்த்தி |

# அனைத்து நாடுகளுக்கும் புதிதாக 10% வரி விதிப்பு

அமெரிக்கா,பிப்.22:

உலக நாடுகளின் பொருள்கள் மீது விதிக்கப்பட்ட பரஸ்பர இறக்குமதி வரி உள்பட அவசர அதிகாரங்கள் சட்டத்தின் கீழ், அமெரிக்க அதிபா டிரம்ப் விதித்த வரிகள் செல்லாது என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீா்ப்பளித்துள்ள நிலையில், அனைத்து நாடுகளுக்கும் புதிதாக 10% வரி விதிப்பை டிரம்ப் அமல்படுத்தியுள்ளார். இது "உடனடியாக" அமலுக்கு வருவதாகவும், தனது வரி விதிப்புகளை செல்லாது என்று அவற்றை ரத்து செய்த 6 நீதிபதிகளின் தீர்ப்பு அவமானத்துக்குரியது. இதனால் முற்றிலும் வெட்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள பல நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்க அதிபா டிரம்ப் பரஸ்பர வரி விதித்தாா். ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாவதால் ஏற்படும் வாத்தகப் பற்றாக்குறையைக் கையாளும் வகையில், இந்த வரி விதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டாா்.

இந்த நடவடிக்கையின் கீழ், இந்தியப் பொருள்கள் மீது 25 சதவீத பரஸ்பர வரி, ரஷியாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்கியதால் இந்தியப் பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரி என மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்பட்ட நிலையில், அமெரிக்கா-இந்தியா இடைக்கால வாா்த்தக ஒப்பந்த பேச்சுவாா்த்தையின் விளைவாக, அது 18 சதவீதமாக குறைக்கப்பட்டது.

## அமல்படுத்திய டிரம்ப்!



உலக நாடுகள் மீதான இந்தப் பரஸ்பர வரி உள்பட அமெரிக்க அவசர அதிகாரங்கள் சட்டத்தின் கீழ், டிரம்ப் விதித்த வரிகளுக்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் அந்நாட்டு எதிா்க்கட்சியான ஜனநாயக கட்சியினா், வணிகா்கள் உள்பட பலா் வழக்கு தொடுத்தனா்.

அமெரிக்காவில் அவசர காலங்களில் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த 1977-ஆம் ஆண்டின் அமெரிக்க சட்டம் அதிபருக்கு அதிகாரமளித்துள்ளதாகவும், அதில் அதிபருக்கு வரி விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு நீதித்துறை வாதிட்டது. ஆனால், அந்தச் சட்டத்தில் இறக்குமதி பொருள்கள் மீது வரி விதிப்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை என்று வழக்கு தொடுத்தவா்கள் வாதிட்டனா.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஜான் ராபா்ட்ஸ் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அமா்வு வெள்ளிக்கிழமை தீா்ப்பளித்தது. அந்த அமா்வில் 6 நீதிபதிகள் அளித்த தீா்ப்பில், 'வரி விதிக்கும் அதிகாரத்தை அமெரிக்க நாடாளுமன்றத்துக்குத்தான் அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக வழங்கியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தை வகுத்தவாகள் அந்த அதிகாரத்தை அரசு நிா்வாகத்துக்கு அளிக்கவில்லை. எனவே டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது' என்று தீா்ப்பளித்தனா்.

அதேவேளையில், அமா்வில் இடம்பெற்ற 3 நீதிபதிகள், 'தற்போதைய வரி விதிப்புகள் அறிவாா்ந்த கொள்கையாக இருக்கலாம் அல்லது அறிவாா்ந்த கொள்கையாக இல்லாமலும் போகலாம். ஆனால், வரலாறு மற்றும் கடந்த கால நடவடிக்கைகள், முடிவுகளைக் கருத்தில் கொள்ளும்போது, டிரம்ப்பின் வரி விதிப்புகள் சட்டபூா்வமானவைதான்' என்று தெரிவித்தனா்.

இதையடுத்துபெரும்பான்மை அடிப்படையில், டிரம்ப்பின் வரி விதிப்பு செல்லாது என்று 6 நீதிபதிகள் அளித்த தீா்ப்பு இறுதி செய்யப்பட்டது.

### புதிதாக 10% வரி விதிப்பு அமல்படுத்திய டிரம்ப்


அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீா்ப்பை "பயங்கரமான முடிவு" என்று குறிப்பிட்ட டிரம்ப், 1974 ஆம் ஆண்டின் வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122 இன் கீழ் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய அனைத்து நாடுகளுக்கும் மேலும் 10 சதவீதம் வரி விதிக்கும் உத்தரவில் கையெழுத்திட்டதாகவும், 10 சதவீதம் வரி விதிப்பில் கையெழுத்திட்டது மிகவும் பெருமையாக உள்ளதாகவும், இந்த வரிவிதிப்பு உடனடியாக அமலுக்கு வரும். இந்த விவகாரத்தில் அனைவரின் கவனத்திற்கு நன்றி என டிரம்ப் கூறியுள்ளார்.

மேலும், இந்தியாவுக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பில் எவ்வித மாற்றமும் இருக்காது எனத் தெரிவித்த டிரம்ப், இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என கூறியுள்ளார்.

வேறொரு அதிகாரம் செயல்படுத்தப்படும் வரை இந்த புதிய வரி அமலில் இருக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார், அமெரிக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கு அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் அனைத்து நாடுகளும் கட்டுப்பட வேண்டும் என்றும் அந்த அதிகாரி அறிவுறுத்தினார்.

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் ஏற்பட்ட சட்டப்பூர்வ தோல்வியைத் தொடர்ந்து, அதிபர் டிரம்ப் அனைத்து நாடுகளுக்கான 10 சதவீத வரிகள் "உடனடியாக அமலுக்கு" வருவதாக அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க டாலரின் மதிப்பு சரிவைச் சந்தித்தது. அதே நேரத்தில் தீர்ப்பு காரணமாக அந்நாடு மற்றும் ஐரோப்பாவின் பங்குச்சந்தைகள் எழுச்சி அடைந்தன. இரும்பு, அலுமினியம், தினசரி நுகர்வு உள்ளிட்ட பொருட்களின் விலையும் கணிசமாக குறையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## இந்தியா வரி செலுத்தும்; அமெரிக்கா செலுத்தாது




இந்தியா உள்பட உலக நாடுகளின் பொருள்கள் மீது விதிக்கப்பட்ட பரஸ்பர இறக்குமதி வரி உள்பட அவசர அதிகாரங்கள் சட்டத்தின் கீழ், அமெரிக்க அதிபா் டிரம்ப் விதித்த வரிகள் செல்லாது என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செய்தியாளர்கள் கூட்டத்தில் செய்தியாளர் ஒருவர் இந்தியாவுக்கு எதிரான வரி விதிப்பு குறித்து கேள்வி எழுப்பிய போது இந்த விளக்கத்தை கூறினார்.

அமெரிக்க - இந்திய வர்த்தக ஒப்பந்தம் குறித்து ஏஎன்ஐ செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், "எதுவும் மாறவில்லை. இந்தியா வரிகளை செலுத்தும், அமெரிக்கா வரிகளை செலுத்த வேண்டியதில்லை... பிரதமர் மோடி ஒரு சிறந்த மனிதர். அமெரிக்காவைப் பொறுத்தவரை அவர் எதிர்த்தவர்களை விட அவர் மிகவும் புத்திசாலி... எனவே நாங்கள் இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தோம்... அந்த ஒப்பந்தத்தின் மூலம் நாங்கள் இந்தியாவுக்கு வரிகளை செலுத்தமாட்டோம். அவர்கள் செலுத்துவார்கள். ஏற்கனவே இருந்த நிலையை நாங்கள் கொஞ்சம் தலைகீழாக மாற்றினோம்" என்று கூறுகிறார்.

மேலும், இந்தியா - அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தில், அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் எந்த மாற்றமும் ஏற்படாதா? ஒப்பந்தம் அப்படியே நீடிக்குமா? என்று செய்தியாளர் தொடர்ந்து கேள்வி எழுப்பியதற்கு, ஆமாம், எந்த மாற்றமும் இல்லை. அந்த வர்த்தக ஒப்பந்தம் அப்படியே நடைமுறைப்படுத்தப்படும் என்று டிரம்ப் பதிலளித்தார். இது சிறந்த வர்த்தக ஒப்பந்தம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## டெல்லி செங்கோட்டை, கோவில்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்; உளவு துறை எச்சரிக்கை



புதுடெல்லி,பிப்.22:

டெல்லியில் சாந்தினி சவுக் பகுதியில் உள்ள மத வழிபாட்டு தலங்கள் (கோவில்கள்), வரலாற்று பிரசித்தி பெற்ற செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியம் உள்ளது என உளவு துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானை அடிப்படையாக கொண்ட லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கண்காணிப்பின் கீழ் இவை தொடர்ந்து உள்ளன. இதன்படி சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்த சதி திட்டம் தீட்டப்பட்டு உள்ளது. கோவிலும் கடுமையாக தாக்குதலுக்கு ஆளாகலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் மசூதி ஒன்றில் கடந்த 6-ந்தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பழிக்கு பழியாக இந்த தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டு உள்ளனர் என உளவு துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 10-ந்தேதி டெல்லி செங்கோட்டை மெட்ரோ நிலையம் அருகே நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி 12 பேர் பலியானார்கள். அருகே நிறுத்தி இருந்த பல்வேறு வாகனங்களும் தீயில் எரிந்து விட்டன.

# உலக தாய்மொழி தினம்: "தமிழே நீ வாழ்ந்திடு"

சென்னை,பிப்.22:

தாய்மொழியின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21-ம் தேதி சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பன்மொழி கலாசாரத்தை அனுசரிக்கவும், ஆதரிக்கவும் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்படுகிறது.

உலக தாய்மொழி தினமாக அனுசரிப்பது குறித்து கடந்த 1999ம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, 2000ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் இந்த ஆண்டின் சர்வதேச தாய்மொழி தினத்திற்கான கருப்பொருள் "பன்மொழி கல்வி குறித்த இளைஞர்களின் குரல்கள்" என்பதாகும்.



இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழே நீ வாழ்ந்திடு!

இன்று உலகத் தாய்மொழிகள் நாள்! ஏராளமானோர் உயிர்கொடுத்துக் காத்த நம் உயிர்நிகர் தமிழ்மொழியை எத்தனை சிறப்புகள் சொல்லி அழைத்தாலும் "தமிழே" என்று அழைத்திடும்போதுகிடைத்திடும் இன்பம் மகத்தானது. தலைவர் கலைஞரின் இந்த வரிகளைப் பாடலாக்கிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு என் நன்றி!

நம் தமிழைக் காத்து - அதை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்த்து, செழிப்போடு வாழவைக்க வேண்டியது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களின் பொறுப்பு!இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "மொழியால் உருவானேன், மொழிவதால் வாழ்கின்றேன்" கமல்ஹாசன் உலக தாய்மொழி தின வாழ்த்து

மக்கள் எத்தனை மொழியை தங்களது ஆர்வத்தின் காரணமாக கற்றுக்கொண்டாலும், தாய்மொழி பற்று இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில், தாய்மொழியின் சிறப்பை போற்றும் வகையிலும், தாய்மொழியின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21-ம் தேதி உலக தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் இந்த ஆண்டு உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நம் தமிழ் மொழியைப் பேணிக் காத்திட அனைவரும் இந்நாளில் உறுதியேற்போம் - டிடிவி தினகரன்

இந்நிலையில், கமல்ஹாசன் உலக தாய்மொழி தின வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பகிர்ந்துள்ள பதிவில்,

மரபணுவில் உருவாகி, தாய்ப்பாலில் உணவாகி, செவிப்பொறியில் ஒலியாகி உடலுக்குள் உயிராகி நிற்பது என் தாய்மொழி. அடிபட்டால் அரற்றவும், உறக்கத்தில் உளறவும், சிரமப் பொழுதுகளில் சிந்தித்திருக்கவும் எனக்குச் சொல்லாகி வருவது தமிழ். அவரவர் தாய்மொழி அவரவர் வாழ்வு. எனக்கென் தாய்மொழி என்றென்றும் என் சுவாசம். மொழியால் உருவானேன். மொழிவதால் வாழ்கின்றேன். தாய்மொழி நாளில் தமிழர்களை வாழ்த்துகிறேன்' என்று தெரிவித்திருக்கிறார்.

# தொகுதிப்பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த குழு அமைத்தது திமுக!

சென்னை,பிப்.22:

கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப்பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்திட 6 பேர் கொண்ட குழு அமைத்து திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

மேற்கு வங்கம், தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைகளின் பதவிக் காலம் முறையே மே 7, 10, 20, 23, ஜூன் 15 ஆகிய தேதிகளில் நிறைவடைய உள்ளது. இதையடுத்து, இந்த மாநிலங்களில் சட்டப்பேரவைத் தோ்தலை நடத்துவதற்கான பணிகளை தோ்தல் ஆணையம் முடுக்கிவிட்டுள்ளது.

தமிழகத்தில் வரும் 23-ஆம் தேதி இறுதி வாக்காளா பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

சட்டப்பேரவைத் தோ்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு தலைமைத் தோ்தல் ஆணையா ஞானேஷ் குமாா் தலைமையிலான இந்திய தோ்தல் ஆணையக் குழு பிப்.25 முதல் 27-ஆம் தேதி வரை பயணம் மேற்கொள்ள உள்ளது. இதனிடையே, ஏப்ரலில் தோ்தலுக்கு வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.




இந்த நிலையில், கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப்பங்கீடு குறித்துபேச்சுவார்த்தைநடத்திட 6பேர் கொண்ட குழு அமைத்து திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப்பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்திட 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் திமுக பொருளாளர் டி.ஆர். பாலு தலைமையில் அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.




## திருக்குர்ஆன் ஓதும் போட்டி



ராமநாதபுரம் மாவட்டம் பனைக்குளத்தில் நடந்த திருக்குர்ஆன் ஓதும் போட்டியில் முஸ்லீம் பரிபாலன சபை தலைவர் கே அப்துல் வஹாப் மற்றும் நிர்வாகிகள்.

## கரகூர் அரசுப்பள்ளியில் முப்பெரும் விழா




**காவேரிப்பட்டினம், பிப்.22:**
காவேரிப்பட்டினம் ஒன்றியம் கரகூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கூடல், ஆற்றல் மன்றம் மற்றும் போதை தடுப்பு விழிப்புணர்வு மன்றம் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது பள்ளியின் தலைமை ஆசிரியர் அருள்மாறன் தலைமை வகித்தார்.

பள்ளியின் தமிழாசிரியை கிரிஜாராணி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முத்து லட்சுமணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

ஆற்றல் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாசிலாமணி மின்சார சிக்கனம் பற்றி பேசினார். அடைத்து மாணவர்களுக்கும் ஆற்றல் மன்றம் சார்பில் பேட்ஜ் வழங்கப்பட்டது விழாவை ஆசிரியர் ராமச்சந்திரன் தொகுத்து வழங்கனார்.

நிறைவாக பள்ளியின் ஆங்கில ஆசிரியை ஜெயந்தி நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கணேசன், தனச்செல்வி, மோகன்குமார், அலுவலகப் பணியாளர்கள் பிரியா, நவநீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நச்சுத்தன்மை லேபிள் செயல்முறை விளக்கம்



**வாடிப்பட்டி, பிப்.22:**
வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை சேர்ந்த இறுதியாண்டு மாணவி எம்.சாருமதி மண்ணாடி மங்கலம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மை லேபிள்கள் குறித்து பயிற்சி அளித்தார்.

பயிற்சியில், பூச்சிக்கொல்லி மருந்துகளில் காணப்படும் வண்ண அடையாள லேபிள்கள் (சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை) பற்றியும், அவை குறிக்கும் நச்சுத்தன்மை நிலைகள் (அதிக, மித, குறைவு) பற்றியும் விரிவாக விளக்கினார்.

மேலும், லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள LD மதிப்பு, பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தும் அவசியம், காத்திருப்பு காலம் (Waiting Period) மற்றும் மீள் நுழைவு இடைவெளி (Re-entry Period) போன்ற முக்கிய அம்சங்களையும் தெளிவுபடுத்தினார்.

பூச்சிக்கொல்லி மருந்துகளை சரியான அளவில், சரியான நேரத்தில் பயன்படுத்துவது மனிதர்களின் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க உதவும் என்றும், லேபிள் வழிமுறைகளை பின்பற்றுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான இத்தகைய விழிப்புணர்வு பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது என தெரிவித்தனர். மேலும், இத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை வைத்தனர்.

## அடையாறு சாஸ்திரி நகரில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்



**சென்னை, பிப்.22:**
சென்னை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் கொண்டு வரப்பட்டு வருகிறது. அவ்வாறாக அடையாறு மண்டலத்தில் சாஸ்திரி நகரில் மாநகராட்சியின் மூலதன நிதியில் நவீன உடற்பயிற்சி உபகரணங்களால் ரூ.33.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ள நவீன உடற்பயிற்சிக் கூடத்தினை மக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று திறந்து வைத்து, உடற்பயிற்சி மேற்கொண்டார்.

முன்னதாக, இக்கட்டிடத்தின் தரைத் தளத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மையத்தினை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் துணை மேயர் மகேஷ்குமார், மண்டல அலுவலர் செந்தில் குமரன், கண்காணிப்பு பொறியாளர் முரளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டி மலை ரெயில் கட்டணம் திடீர் உயர்வு



**மேட்டுப்பாளையம், பிப்.22:**
கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இருந்து நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு மலை ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரெயில்களின் சேவை 3 வகையாக நடைமுறையில் உள்ளது.

அதன்படி தினமும் 8 பயணங்கள் கொண்ட சாதாரண கட்டண சேவை, கோடை விடுமுறை, பிற விடுமுறைகள், வார இறுதிநாட்கள் மற்றம் பண்டிகைகளில் இயக்கப்படும் சிறப்பு ரெயில் சேவை, திருமணம், குடும்ப விழா, நிறுவன விழா மற்றும் சந்திப்பு நிகழ்ச்சிக்காக முழு ரெயிலையும் தனியாக வாடகைக்கு எடுப்பது (சார்ட்டர்டு சிறப்பு ரெயில்) என்று மூன்று வகைகளில் இயக்கப்பட்டு வருகிறது.

ஊட்டி மலை ரெயிலில் சாதாரண கட்டண ரெயில்களில் பயணிக்க முதல் வகுப்பில் மேட்டுப்பாளையம் முதல் குன்னூருக்கு ரூ.500, 2-வது வகுப்பில் பயணிக்க ரூ.250 கட்டணம் வீதம் வசூலிக்கப்படுகிறது.

குன்னூர்-ஊட்டி இடையே முதல் வகுப்பில் பயணிக்க ரூ.290, 2-வது வகுப்பில் பயணிக்க ரூ.150 மற்றும் மேட்டுப்பாளையம்-ஊட்டி இடையே முதல் வகுப்பு கட்டணம் ரூ.1000, 2-வது வகுப்பு கட்டணம் ரூ.550 வீதம் வசூலிக்கப்படுகிறது.இந்த நிலையில் அந்த ரெயில்களின் கட்டணம் தற்போது 5 சதவீதம் உயர்த்தப்படுவதாக ரெயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து தென்னக ரெயில்வே வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

ஊட்டி மலை ரெயிலில் சாதாரண கட்டணம் கடைசியாக 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ந்தேதி உயர்த்தப்பட்டது. அதன்பிறகு அதிகரிக்கப்படவில்லை.

ஆனால் மேட்டுப்பாளையம்-குன்னூர், குன்னூர்-ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையம்-ஊட்டி இடையேயான மலை ரெயிலின் இயக்க செலவுகள், பராமரிப்பு செலவு மற்றும் பணியாளர்களின் ஊதியம் ஆகியவை கணிசமாக உயர்ந்து உள்ளன.இதனை ஈடுகட்டும் வகையிலும், வருவாய் இழப்பை சமாளிக்கும் வகையிலும் நீலகிரி மலை ரெயில் பிரிவில் சாதாரண ரெயில்களின் அடிப்படை கட்டணம் 5 சதவீதம் உயர்த்தப்படுகிறது. மேலும் இந்த புதிய கட்டண நடைமுறை இன்று முதல் அமலுக்கு வருகிறது.

அதன்படி சாதாரண ரெயில்களுக்கான அடிப்படை கட்டணம் மட்டுமே 5 சதவீதம் உயர்த்தப்படும். மற்றபடி முன்பதிவு கட்டணம், கூடுதல் கட்டணங்கள் போன்றவற்றில் எந்த மாற்றமும் இல்லை.

மேலும் ஏற்கனவே பழைய கட்டணத்தில் வழங்கப்பட்ட பயணச்சீட்டுகள் செல்லுபடியாகும். அதற்கு கூடுதல் கட்டண வித்தியாசம் வசூலிக்கப்படாது. இன்று முதல் புதிய கட்டணத்தில் பயணச்சீட்டுகள் வழங்கப்படும்.

ஊட்டி மலை ரெயில் பிரிவில் இயக்கப்படும் சிறப்பு ரெயில்கள் மற்றும் சார்ட்டர் சிறப்பு ரெயில்கள் ஆகியவற்றின் கட்டணத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தது எங்களுக்கு கூடுதல் பலம்- வைகோ



**நெல்லை, பிப்.22:**
ம.தி.மு.க நெல்லை மண்டல தேர்தல் நிதி மற்றும் கட்சி வளர்ச்சி நிதி வழங்கும் நிகழ்ச்சி நெல்லை புதிய பஸ் நிலையம் அருகே உள்ள தனியார் ஓட்டலில் நேற்று நடைபெற்றது.

பொதுச்செயலாளர் வைகோ, அவைத்தலைவர் ஆடிட்டர் அர்ஜுனராஜ், பொருளாளர் செந்திலதிபன் ஆகியோர் கலந்து கொண்டு நிதியினை பெற்றுக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் நெல்லை மண்டலத்துக்குட்பட்ட நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய கட்சி ரீதியிலான 10 மாவட்டங்கள் சார்பில் சுமார் ரூ.2 கோடி வரை தேர்தல் நிதி வழங்கப்பட்டது.

முன்னதாக பொதுச்செயலாளர் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது:-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் ம.தி.மு.க.வுக்கு போட்டியிடும் தொகுதிகள் எண்ணிக்கை மற்றும் எந்தெந்த தொகுதிகள்? என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 4 பேர் கொண்ட குழு அமைத்துள்ளோம். அந்த குழு தி.மு.க.வில் அமைக்கப்படும் பேச்சுவார்த்தை குழுவுடன் பேசி சுமூக முடிவு எடுக்கப்படும்.

எங்கள் கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்துள்ளது கூடுதல் பலமாக அமைந்துள்ளது. ஓ.பி.எஸ்.சும் எங்கள் கூட்டணியில் வந்துள்ளார். அ.தி.மு.க.வில் அடிமட்டத்தில் இருந்து படிப்படியாக உயர்ந்தவர் ஓ. பன்னீர் செல்வம். அவர் அரசியல் அனுபவம் மிக்கவர்.

திராவிட இயக்கங்கள் விழிப்பாக உள்ளது. திருக்குறள் குறித்து பேசி தமிழகத்தில் ஆட்சியை பிடித்து விடலாம் என்று பிரதமர் மோடி நினைக்கிறார். அது நடக்காது.

வாஜ்பாய் போன்று ஒரு தலைவரை நான் பார்க்கவில்லை. ஆனால் இப்போது பா.ஜ.கவின் நிலை வேறு. அதேபோல் அத்வானியும் ஒரு வினோதமான தலைவர் தான்.

அவரிடம் நான் மத சார்பின்மையை ஆதரிக்கிறீர்களா? என்று நேருக்கு நேர் நான் கேட்டபோது அவர் ஆம் என்று தைரியமாக சொன்னார். எனது குரல் பாராளுமன்றத்தில் மீண்டும் ஒலிப்பது குறித்து காலம் பதில் சொல்லும்.

இந்தியாவின் தலைநகரான டெல்லியை வாரணாசிக்கு மாற்றுவதற்கு பா.ஜ.க. அரசு முயற்சி செய்து வருகிறது. இது வரும் காலங்களில் அபாயகரமானதாக மாறும். இதனையும் அனைத்து மாநிலத்தவர்களும் சேர்ந்து முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டும் என்றார்.

## ஈஷா சார்பில் தொண்டாமுத்தூர் வட்டார மக்களுக்கு இலவச தகன சேவை



**கோவை, பிப்.22:**
கோவை மாவட்டம் இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சி மற்றும் ஈஷா அறக்கட்டளை இணைந்து செயல்படுத்தும் நவீன எரிவாயு மயானத்தில் தொண்டாமுத்தூர் வட்டார பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் 'இலவச தகன சேவை' தொடங்கப்பட்டு உள்ளது.

ஈஷா யோக மையத்தைச் சுற்றியுள்ள 5-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளை சேர்ந்த மக்கள், அவர்களின் பகுதிக்கு அருகிலேயே ஒரு மயானத்தை அமைத்து தருமாறு அரசு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, ஈஷா அறக்கட்டளை பஞ்சாயத்து அனுமதியுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட இதர அரசு துறைகளின் ஒப்புதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நவீன எரிவாயு மயானத்தை அமைத்தது.

தற்போது இந்த நவீன எரிவாயு மயானம் முழுமையான செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதில் தொண்டாமுத்தூர் வட்டாரப் பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இலவச தகன சேவை தொடங்கப்பட்டு உள்ளது.

இந்த எரிவாயு மயானத்தை இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சியுடன் ஈஷா அறக்கட்டளை இணைந்து செயல்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சத்குருவின் வழிகாட்டுதலில் அனைத்து மக்களுக்கும் கண்ணியமான இறுதிச் சடங்குகள் மற்றும் எரியூட்டும் சேவைகளை வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் ஈஷா அறக்கட்டளை 2010-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள மயானங்களை இயக்கி பராமரித்து வருகிறது.

தற்போது சென்னை பெசன்ட் நகர், கோவை, நெய்வேலி, வேலூர் மற்றும் தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகளில் 30 மயானங்களை ஈஷா பராமரித்து வருகிறது.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஈஷா சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் எரிவாயு மயானங்களில், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் இறுதிச் சடங்குகளை கண்ணியத்துடன் எந்தவித நிதிச்சுமையுமின்றி மேற்கொள்ள உதவும் வகையில் 'வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு இலவச தகன சேவை' வழங்கும் திட்டத்தை அறிவித்தது.

இத்திட்டம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களின் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயற்குழு கூட்டம்



**இராமநாதபுரம், பிப்.22:**
தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயற்குழு கூட்டம் இராமநாதபுரம் வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் ஜெ.ஜே. லியோன் தலைமை தாங்கினார். மாவட்ட மூத்த நிர்வாகிகள் நவனீத கிருஷ்ணன், பாலமுருகன் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணைச் செயலர் பரமேஸ்வரன் வரவேற்றுப் பேசினார்.

மாவட்டச் செயலாளர் ஜீவானந்தம் கூட்டப் பொருள்களான இரங்கல் தீர்மானம், பாராட்டு தீர்மானம், தேசிய அறிவியல் தினம், உலக மகளிர் தினம், உறுப்பினர் சேர்க்கை மற்றும் கிளைச் செயல்பாடுகள், உபகுழு செயல்பாடுகள், துளிர் அறிவியல் இதழ், பயிற்சி வகுப்புகள் குறித்து விளக்கி பேசினார்

மாநில துணைத் தலைவர் காந்தி உபகுழுக்களின் பணிகள் குறித்து விளக்கிப் பேசினார்.

நிறைவாக, மாவட்ட துணை செயலர் சசிக்குமார் நன்றி கூறினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட செயலர் ஜீவானந்தம் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் பரமேஸ்வரன், வின்சென்ட் வீரு, பிரியங்கா போன்றோர் செய்திருந்தனர்

## ஹோலி ஏஞ்சல்ஸ் பி.சி.வி. சர்வதேச பள்ளி ஆண்டு விழாவில் விஜய் வசந்த் எம்.பி. பங்கேற்பு மாணவ- மாணவிகளுக்கு அறிவுரை




**திருநெல்வேலி, பிப்.22:**
திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அருகே கௌசால்யபுரம் பகுதியில் அமைந்துள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் பி.சி.வி சர்வதேச பள்ளியில் (Holy Angels BCV International School) 2026-ம் ஆண்டு விழா "சிற்பிகா 26" என்ற பெயரில் நடைபெற்றது.

இந்த ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், கலந்து கொண்டு பள்ளியில் சிறந்து விளங்கிய மாணவிக்கு பொன்னாடை அணிவித்து விருதினை வழங்கி சிறப்புரையாற்றினர்.

அப்போது விஜய் வசந்த் எம்.பி. பேசியதாவது:-

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவ-மாணவிகள் இருக்க வேண்டும். அதை போல் மொபைல் போனை அவசியத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதனை தவறாக பயன்படுத்தக் கூடாது என்று மாணவ- மாணவிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாணவர்கள் நமது தேசத்தலைவர்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களது தியாகங்கள் நாட்டுக்கு அவர்கள் செய்த பங்களிப்பு பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களை போல் நாமும் இந்த சமுகத்திற்கு தனது பங்களிப்பை செலுத்த வேண்டும். நமது தாய், தந்தைக்கு மரியாதை அளிக்க வேண்டும் என பேசினார்.

படிப்பு மட்டும் இல்லாமல் விளையாட்டு, நடனம் மற்றும் உங்களது திறமைகளை அறிந்து அதை வெளி கொணர வேண்டும். தாய், தந்தையர்களும் உங்களது குழந்தைகளின் திறமைகளை அறிந்து வெளி கொண்டு வர உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விஜய் வசந்த் எம்.பி. பேசினார்.

நிகழ்ச்சியில் குழந்தைகளின் கண்கவர் நடனம் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### சென்னையில் நடைபெற்றது

## ஜப்பான் மாப்பிள்ளைக்கும் தமிழ்ப் பெண்ணுக்கும் சுயமரியாதை திருமணம்!



**சென்னை, பிப்.22:**
மணமகள் செல்வி வேலைக்காக ஜப்பான் சென்றபோது ஷூன்யா யாஷிமாக் உடன் காதல் ஏற்பட்டுள்ளது.

சென்னை பெரியார் திடலில் சுயமரியாதை திருமணம் செய்துகொண்டனர்.

சென்னையில் உள்ள பெரியார் சுயமரியாதைத் திருமண நிலையத்தில் ஜப்பான் மாப்பிள்ளைக்கும் தமிழ்ப் பெண்ணுக்கும் நடைபெற்ற சுயமரியாதை திருமணம் நடைபெற்றுள்ளது.

மணமகள் செல்வி வேலைக்காக ஜப்பான் சென்றபோது ஷூன்யா யாஷிமாக் உடன் காதல் ஏற்பட்டுள்ளது.


இதையடுத்து இருவரும் மதங்களைக் கடந்து சென்னை பெரியார் திடலில் சுயமரியாதை திருமணம் செய்துகொண்டனர்.


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
80 %OFF SPECIAL OFFER
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
90 DAYS MONEY BACK GUARANTEE


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certified
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500
per day
Work From Home
Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000
per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..
www.arultharumdeivam.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## கவிதை அரங்கம்!





காற்றோடு
பேசும் மலராய்
உன் மனதோடு
பேசி கொண்டிருக்கின்றேன்
நான்...!

நான்
மறைந்தாலும்
உன் மனதில்
மறக்கப்படாதளவுக்கோர்
அழகிய வாழ்க்கையை
வாழ்ந்திட வேண்டும்

பார்க்க
மறுத்த விழிகளும்
காத்துக்கிடக்கு
உன்னன்பில்
தொலைந்து...!

இடைவெளி
வலியை தருமென
தெரிந்தும் பிடிவாதமாய்
அனுபவித்திருக்கிறோம்
இருவரும்...!

## வாழ்க்கை தத்துவம்...



சிரிப்பை பழக்கமாக்கினால்
துன்பம் கூட
உன்னை காயப்படுத்தாது

சில தோல்விகள் நம்மை நிறுத்தாது
அவை நம்மை விழிக்க வைக்கும்

சில பயணங்கள்
இலக்கை அடையாது
ஆனால் அனுபவத்தை
அழகாக செய்கின்றன

சின்ன சின்ன மகிழ்ச்சிகளே
வாழ்க்கையின் பெரிய செல்வம்

ஒவ்வொரு விடியலும்
புதிய வாய்ப்பாக கருதினால்
இரவுகள் இனிமையாகும்

சில நேரம் மௌனம் பேசும்
அது வாழ்க்கையின்
உண்மை குரல்

## விதைநெல்!



"தாத்தா உன்னை
எங்க டீச்சரு...வந்து
பார்க்க சொன்னாங்க..
பள்ளிக்கூடத்துல
வந்து பார்ப்பியாம்..
வரலேன்னா நாளைக்கி
என்னை திட்டுவாங்க..
மறக்காம வந்து சேரு
தாத்தா"என்றபடி
புத்தகப்பையோடு வீதியில்
இறங்கினான் பேரன்
புவனேஷ். 'என்னவா
இருக்கும் பய ஏதாவது
படிப்புல ஏடாகூடம்
பண்ணியிருந்தா ..
மருமவள தான் கூப்பிட்டு
விடும் அந்த டீச்சர் புள்ள..
மருமவளும் அதுவும்
ஒன்னா படிச்ச புள்ளைக..
ஒரு மண்ணும் வெ
ளங்காத கெழவனுகிட்ட
என்ன பேசப்
போகுது'யோசனையோடு
நாணல்புதராய்
வளர்ந்திருக்கும்
சிரைக்கப்படாத தாடியை
சொறிந்தபடியே நகர்ந்தார்
பள்ளிக்கூடத்தை
நோக்கி. *** "வாங்க..
பெரியய்யா எவ்வளவு
அனுபவசாலி நீங்க..
ஆனா ஒங்க நடவடிக்கை
ஒன்னும் அதை
மெய்ப்பிக்க காணுமே..
ம்" எடுத்த எடுப்பிலேயே
தண்டல்காரனின்
தெனாவெட்டில்
ஆரம்பித்தார் டீச்சர்.
மௌனத்தினூடே
சிந்திக்கலானார்
'நாம என்ன தப்பு..
பண்ணினோம்..
சிநேகிதிகாரி ஏதும் குறை
சொல்லி கண்டிக்க
சொல்லியிருப்பாளோ..
அப்படியே உயிர்
கொடுக்குற நட்பாக
இருந்தாலும்..நம்ம
குடும்பத்து விவகாரத்துல
தலையிட உரிமையும்..
கண்டிக்க வயசும்
அனுபவமும் உண்டா
இந்த பொடிமட்டைக்கீ..
'முசுமுசுவென
மூக்கு விடைக்க
எழுந்த கோபத்தை
கட்டுப்படுத்திக்கொண்டார்.
"என்னம்மா..என்னவோ
கேட்கறீங்க.. நாலெழுத்து
படிச்ச புள்ளை..நானோ
கைநாட்டுக்காரன்..
புரியலியேமா.?". "
அதொன்னுமில்ல
பெரியவரே..அறுவடை
செஞ்சு களத்துக்கு
வர்ற நெல்லுல ..விதை
நெல்லு..விற்பனை
நெல்லு..வீட்டுக்கு
நெல்லுன்னு பிரிப்பீங்க
தானே". "ஆமாம்மா..
ஒவ்வொன்னுக்கும்
பதக்காய்ச்சல்.. பக்குவம்
இருக்குல்லம்மா..
தனித்தனியா தானே
செப்பமிடனும்.. அதுதானே
காலாகாலத்து வழமை". "
சரிதான் ..ஐயா அபபடியே
மனிதர்களையும் பகுத்து
பார்க்க தெரியனுமே
..உங்க பேரன் விதை
நெல்லு மாதிரி இல்லியா..
உங்க வம்ச விளைச்சலை
தரப்போற தலைமுறை
விதை..அடுத்த அடுக்கு
வீரியவிதையை
கைமாத்தி தரவேண்டிய
கடமை உள்ளவன்.
சரியா.?!அன்னிக்கு
கடைவீதியில பார்க்கறேன்..
திண்பண்டத்துக்கு காசு
கேட்டு வந்த அவனை..
நிக்க வச்சுகிட்டு..
அவனுக்கு எதிரிலேயே
சாராயப்பாட்டிலை
திறக்கறீங்க..
கப்புல கவிழ்த்து
சீப்பிக்குடிச்சிட்டு..
ஊறுகாய நக்கறீங்க..
நீங்க கண்ணை மூடி
அந்த கருமாந்திரத்தை
குடிக்கும் போது..
சின்னப்பசங்க
கூடிநின்னு வேடிக்கை
பார்க்கறானுங்க..
ஏதோ சாகசத்தை
பார்க்குற சுதாரிப்பு..
நாளை அவனுங்க
அந்த சாகசத்துக்கு
ஏங்குவானுங்க..பாதை
மாறி சீரழிஞ்சு..வீடு..
சமுதாயம்..எதிர்காலம்
எல்லாம் அவனுங்களுக்கு
எதிராகிடும்..அந்த
பசங்களுக்கு ஒரு
ரூபாய தூக்கிப்போட்டு
துரத்திவிட்டுட்டு..
மறைவா போயி உங்க
உற்சாகசாந்தியை
வச்சுக்குங்க ஐயா...
விதை நெல்லை
மட்டும் மூனுகாய்ச்சல்
போட்டு ..வேப்பிளை..
நொச்சியிலை..
மிளகாய்வற்றல் கலந்து
கோட்டை கட்டி காவந்து
பண்ணுறது மட்டும்
சம்சாரித்தனமில்ல..
சமுதாயத்துல
இளையதலைமுறை
ங்கிற விதை நெல்லையும்
பக்குவப்படுத்தி பாதுகாத்து
வளர்த்தெடுக்கறதும்
நம்ம பொறுப்பு தானே
..ஐயா"என்றார் டீச்சர்.
தலையாட்டி அமோதித்து
கண்கள் கலங்க
கைகூப்பினார். பதிலுக்கு
டீச்சரும் கைகூப்ப..புது
அனுபவத்தை பூரிப்போடு
பார்த்து நின்றார்கள்
கிராமத்து குழந்தைகள்.!

**க.குமாரகுரு**
அரும்பூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*இரண்டு பள்ளி சிறுவர்கள் பேசிக்கொண்டது;*

*நம்ம டீச்சருக்கு வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சுன்னு நினைக்கிறேன்.*

*எப்படிச் சொல்ற?*

*பின்ன என்ன, அவங்களே போர்டில சிலப்பதிகாரம்னு எழுதிட்டு,*

*நம்மகிட்ட சிலப்பதிகாரத்தை எழுதியது யார்னு கேட்கிறாங்க.*



## தினம் ஒரு சமையல்



### கத்தரிக்காய் தக்காளி கொத்சு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| நாட்டுத்தக்காளி | -6 |
| பாசிப்பருப்பு | -2 ஸ்பூன் |
| கத்தரிக்காய் | -3 |
| சிறிய சைஸ் உருளைக்கிழங்கு | -1 |
| சின்ன வெங்காயம் | -10 |
| பூண்டு | -4 பற்கள் |
| சிறிய நெல்லிக்காய் அளவு புளி | -1 |
| பச்சை மிளகாய் | -2 |
| மிளகாய் தூள் | -1/2 ஸ்பூன் |
| உப்பு | -தேவைக்கேற்ப |

**தாளிப்பதற்கு தேவையானவை**

| | |
|---|---|
| எண்ணெய் | -4 ஸ்பூன் |
| வெங்காயம் | -5 சின்ன |
| பூண்டு | -4 பற்கள் |
| கருவேப்பிலை | -1 கொத்து |
| கடுகு, சீரகம் | |

**செய்முறை:**



தக்காளி கத்தரிக்காய் உருளைக்கிழங்கு அனைத்தையும் துண்டுகளாக நறுக்கி குக்கரில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதில் சின்ன வெங்காயம் பூண்டு பாசிப்பருப்பு சேர்க்கவும்.

கூடவே மிளகாய் தூள் தேவையான உப்பு புலி எல்லாவற்றையும் சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி குக்கரை மூடி பத்து நிமிடங்கள் சிறு தீயில் வேக வைக்க வேண்டும். பிறகு குக்கரை திறந்து நன்றாக கடைந்து கொள்ளவும்.

தாளிப்பு கரண்டியில் எண்ணெய் ஊற்றி கடுகு கருவேப்பிலை நறுக்கிய வெங்காயம் பூண்டு சேர்த்து தாளித்து பொன்னிறமானதும் கடையலில் சேர்க்கவும்.

## மாசிக்காய் பயன்கள்



மாசிக்காய் ஒரு சிறந்த சித்த மருத்துவப் பொருளாகும். இது துவர்ப்பு சுவை கொண்டது. இது பெரும்பாலும் வாய்ப்புண், தொண்டை வலி, வெள்ளைப்படுதல், பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் அதிக ரத்தப்போக்கு, கருப்பை கோளாறுகள் மற்றும் கிருமித் தொற்றுகளை குணப்படுத்த உதவுகிறது.

மாசிக்காயின் முக்கிய மருத்துவ பயன்கள்:

வாய் மற்றும் தொண்டை புண்: மாசிக்காய் பொடியை வெந்நீரில் கலந்து வாய் கொப்பளித்தால் வாய் புண், தொண்டை வலி மற்றும் கிருமித் தொற்று நீங்கும்.

பெண்கள் ஆரோக்கியம்: மாதவிடாய் காலத்தில் அதிக ரத்தப்போக்கை கட்டுப்படுத்தவும், கருப்பை பலம் பெறவும் தேன் அல்லது நெய்யில் கலந்து சாப்பிடலாம்.

கட்டிகள் மற்றும் புண்கள்: மாசிக்காயை அரைத்து பூசுவது புண்கள் மற்றும் கட்டிகளை ஆற்றுப்படுத்த உதவுகிறது.

தோல் பராமரிப்பு: மாசிக்காய் பொடியை பூசுவது தோல் சம்பந்தமான தொற்றுகள் மற்றும் வெள்ளைப்படுதலை குணப்படுத்த உதவும்.

குழந்தைகளுக்கான மருந்து: சீன மருத்துவத்தில் குழந்தைகளுக்கு உரை மருந்து வகையாகவும், பல் துலக்குவதற்கும், வாய் சுத்தத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பயன்படுத்தும் முறை:

வாய் கொப்பளித்தல்: மாசிக்காய் பொடியை வெந்நீரில் 10 நிமிடம் ஊறவைத்து, வடிகட்டி கொப்பளிக்கலாம்.

உட்கொள்ளுதல்: பொடியை தேன் அல்லது நெய்யுடன் கலந்து பனைவெல்லத்துடன் உட்கொள்ளலாம்.

குறிப்பு: மருத்துவ பயன்பாட்டிற்கு முன், சித்த மருத்துவர் அல்லது நிபுணரை கலந்தாலோசிப்பது நல்லது.

## 2ஆம் திருமணம்.. முதல் முறையாக பேசிய நடிகை மீனா



குழந்தை நட்சத்திரமாக நடிக்க தொடங்கி அதன்பின் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை மீனா. ரஜினி, கமல், சிரஞ்சீவி, அஜித், நாகார்ஜுனா, மோகன்லால் என பல டாப் ஸ்டார்ஸுடன் இணைந்து நடித்திருக்கிறார். அடுத்ததாக இவர் நடிப்பில் மலையாளத்தில் திரிஷ்யம் 3 படம் வெளிவரவிருக்கிறது. இப்படத்தை எதிர்பார்த்து ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

நடிகை மீனா கடந்த 2009ஆம் ஆண்டு வித்யாசாகர் என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு நைனிகா என்கிற மகள் உள்ளார். மீனா எப்படி தனது சிறு வயதிலேயே சினிமாவில் நடிக்க தொடங்கினாரோ, அதே போல் நைனிகாவும் தற்போது சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக தெறி படத்தில் அறிமுகமானார். இதன்பின் சில படங்கள் நடித்தாலும், தற்போது படிப்பில் முழு கவனம் செலுத்தி வருகிறார்.

மீனாவின் கணவர் வித்யாசாகர் கடந்த 2022ஆம் ஆண்டு காலமானார். இவருடைய மறைவு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதன்பின், மீனா இரண்டாம் திருமணம் செய்துகொள்ளப்போவதாக பல விதமான வதந்திகள் பரவின. இந்த நிலையில், வதந்திகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் நடிகை மீனா தற்போது பேசியுள்ளார்.

"எனக்கு 2வது திருமணம் என பரவும் வதந்திகள் என்னை மிகவும் காயப்படுத்தும். முன்னாடி என்னை பற்றிய வதந்திகள் வரும்போது எனக்கு தெரிய ரொம்ப லேட்டாகும். ஆனா, இப்போ சோசியல் மீடியாவில் ஒரு விஷயம் வந்துச்சுன்னா அது பெரிதாகி, சீக்கிரமாவே தெரிந்துவிடுகிறது. நான் ஒரு பெண் செலிபிரிட்டி, சிங்கிளாக இருக்கிறேன் என்பதற்காக, உண்மை என்ன என்று தெரியாமல் என்ன வேணுமானாலும் பேசலாமா? கேக்குறதுக்கு ஆள் இல்லைன்னு இப்படி பண்றீங்களா? இதெல்லாம் பார்க்கும் போது ரொம்ப கோபமா இருக்கு" என கூறியுள்ளார்.

## சினிமா



ருக்மிணி வசந்தின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகி, ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது. இதோ பாருங்க:

## திருமண கிசுகிசு.. நான் தனுஷுக்கு தீவிர ரசிகை! வியந்து பேசிய மிருனாள் தாகூர்




நடிகர் தனுஷ் மற்றும் நடிகை மிருனாள் தாகூர் இருவரும் காதலித்து வருவதாகவும், விரைவில் திருமணம் செய்யப்போவதாகவும் சமீபகாலமாக கிசுகிசு பரவி வருகிறது. நாங்கள் நண்பர்கள் மட்டும் தான், காதல் இல்லை என மிருனாள் பலமுறை விளக்கம் கொடுத்துவிட்டார். இருப்பினும் வதந்திகள் நின்றபாடில்லை.

கிசுகிசு பற்றி சமீபத்தில் பேசிய மிருனாள் தாகூர், 10 கோடி கொடுத்தாலும் இது போல ப்ரோமோஷன் கிடைக்காது என கிசுகிசு பரப்புபவர்களை சாடி இருந்தார்.

இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் தான் தனுஷின் தீவிர ரசிகை என மிருனாள் தாகூர் பேசி இருக்கிறார்.

நான் தனுஷின் மிக மிக தீவிர ரசிகை. அசுரன் படத்தை தான் பல முறை பார்த்திருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் பார்ப்பேன் என கூறி இருக்கிறார். அவரது நடிப்பை அப்படி வியந்து பார்ப்பேன், அவருடன் எப்போதாவது நடிப்பேன் என்கிற ஆசையும் இருக்கிறது என மிருனாள் கூறி இருக்கிறார்.

Son Of Sardaar 2 பட ஸ்கிரீனிங் நிகழ்ச்சிக்கு வரும்படி அவர் தேரி இஸ்க் மேன் ஷூட்டிங்கில் இருக்கும்போது அழைத்தேன். அவர் வருவார் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவர் வந்தபோது நான் அதிகம் மகிழ்ச்சி ஆகிவிட்டேன் என அவர் கூறி இருக்கிறார்.

அந்த நிகழ்ச்சிக்கு பிறகு தான் இருவரும் காதலிப்பதாக கிசுகிசு பரவியது குறிப்பிடத்தக்கது.

# மகா சிவராத்திரி 2026 பஞ்சபூத தலங்கள் தவிர தமிழகத்தில் செல்ல வேண்டிய டாப் 10 சக்தி வாய்ந்த சிவாலயங்கள்



*மகா சிவராத்திரி அன்று இரவு முழுவதும் கண் விழித்து, சிவ பூஜை, சிவ அபிஷேகங்களை தரிசிப்பதால் பாவங்கள் நீங்கி, புண்ணியம் கிடைக்கும். இரவு முழுவதும் நடைபெறும் நான்கு கால பூஜைகளை தரிசிக்க அனைத்து சிவன் கோவில்களிலும் பக்தர்கள் கூடுவது வழக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இரவு முழுவது ஒவ்வொரு சிவன் கோவிலான சென்று வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது.

› இந்த ஆண்டு மகா சிவராத்திரி பிப்ரவரி 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அன்றைய தினம் தமிழகத்தில் சென்று வழிபட வேண்டிய மிகவும் சக்தி வாய்ந்த சிவன் கோவில்களில் மிக முக்கியமான, பிரபலமான ஆலயங்கள் சிலவற்றை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**மகா சிவராத்திரி வழிபாடு :**

› மகா சிவராத்திரி என்பது சிவ பெருமானை வழிபடுவதற்குரிய நாள் மட்டுமல்ல. இது பிரபஞ்ச ஆற்றல் அதிகரித்து காணப்படும் ஒரு சக்தி வாய்ந்த நாளாகும். இந்த நாளில் உலகம் முழுவதிலும் உள்ள சிவ பக்தர்கள் விரதம் இருந்து, இரவு முழுவதும் கண் விழித்து, சிவ வழிபாடு செய்வது வழக்கம். மகா சிவராத்திரி என்பது சிவபெருமானுக்கும், பார்வதி தேவிக்கும் திருமணம் நடைபெற்ற நாளாக கருதப்படுகிறது. அதே போல் சிவபெருமான் தன்னுடைய ஆனந்த தாண்டவத்தை நிகழ்த்தி காட்டிய இரவாகவும் கருதப்படுகிறது. சிவனின் ஆற்றல் அதிகரித்து காணப்படும் இந்த நாளில் சிவபெருமானின் அருளை பெற மகாசிவராத்திரி அன்று தமிழகத்தில் உள்ள சில முக்கியமான, பழமையான கோவில்களுக்கு சென்று தரிசனம் செய்வது சிறப்பானதாகும்.

**சிறப்புமிக்க சிவ தலங்கள் :**

வழக்கமாக தமிழகத்தில் சிவ தலங்களில் என்றால் பஞ்சபூத தலங்களான காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவில், திருவானைகாவல் ஜம்புலிங்கேஸ்வரர் கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில், காளஹஸ்தி காளாத்தீஸ்வரர் கோவில் ஆகியனை தான் நம்முடைய நினைவிற்கு வரும். ஆனால் இந்த பஞ்ச பூத தலங்களை தவிர சிறப்பு மிக்க, புகழ்பெற்ற, பல மடங்கு புண்ணியம் தரும் சிவ தலங்கள் உள்ளன. அவர்களில் முக்கியமான 10 கோவில்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**மகா சிவராத்திரியன்று செல்ல வேண்டிய 10 சிவன் கோவில்கள் :**

1. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், தஞ்சாவூர் - பெரிய கோவில், பெரிய லிங்கம், பெரிய நந்தி என அனைத்து பெரிய என சிறப்பித்து கூறப்படும் தலம். மிக பழமையான, பல அற்புதங்கள், ஆச்சரியங்கள் நிறைந்த சிவ தலம் இது. மிகப் பெரிய சிவ தலமாகவும், பாரம்பரிய சின்னமாகவும், பழமையான சிவாலயமாகவும் விளங்கும் தலம். ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த பெருவுடையாரை தரிசனம் செய்வதே மிகப் பெரிய பாக்கியம் ஆகும்.

2. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், மதுரை - பாடல் பெற்ற சிவ தலங்களில் ஒன்றாவும், சக்தி பீடங்களில் ஒன்றாகவும், மிகப் பெரிய அம்மன் கோவிலாகவும் விளங்கும் ஒரே தலம் மதுரை. சிவ பெருமான் தன்னுடைய 64 திருவிளையாடல்களையும் நிகழ்த்திக் காட்டிய தலம். சிவ பெருமான் ஆண்டவனாக மட்டுமின்றி அரசனாகவும் ஆட்சி புரியக் கூடிய தலம். சொக்கநாதர், சுந்தரேஸ்வரர் என பல பெயர்கள் கொண்ட இத்தல சிவனை பற்றியும், இக்கோவில் பற்றியும் சொல்லிக் கொண்டே போகலாம்.

**உலகின் முதல் சிவன் கோவில் :**

3. திருஉத்திரகோசமங்கை திருக்கோவில், ராமநாதபுரம் - உலகின் முதல் சிவன் கோவில் என போற்றப்படும் பெருமைக்குரிய தலமாகும். மிகப் பெரிய மரகத நடராஜர் அமைந்துள்ள ஒரே தலம். சகஸ்ரலிங்கம் உருவாக காரணமான தலமாகவும், சிவ பெருமான் நிரந்தரமாக வீற்றிருந்து அருள்புரியும் தலமாக கருதப்படும் கோவில் இது. வாழ்நாளில் ஒரு முறையாவது சென்று தரிசிக்க வேண்டிய சிவ தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

4. கபாலீஸ்வர் கோவில், சென்னை - சென்னையில் உள்ள சப்தசிவ தலங்களில் இதுவும் ஒன்று. அம்பிகை, மயில் உருவில் வந்து ஈசனை வழிபட்டு, வரம் பெற்ற தலம். முருகப் பெருமானை சிவனை வழிபட்டு சக்திவேல் பெற்ற தலம். பிரம்ம தேவரே தன்னுடைய பாவங்கள் நீங்க வழிபட்ட தலம் என ஏராளமான சிறப்புகளைக் கொண்ட சென்னை மியலாப்பூரில் அமைந்துள்ள கபாலீஸ்வரர் கோவில்.

**அனைத்து தோஷ பரிகார தலம் :**

5. சங்கமேஸ்வரர் கோவில், பவானி, ஈரோடு - அனைத்து விதமான தோஷங்கள், பாவங்கள் ஆகியவை நீங்குவதற்கான பரிகார தலமாக விளங்கும் கோவில் இது. விஸ்வாமித்ரரால் காயத்ரி மந்திரம் சொல்லி பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தை இங்கு தரிசனம் செய்யலாம். தென்னிந்தியாவின் திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படும் புண்ணிய தலம் இது.

6. அர்த்தநாரீஸ்வர் கோவில், திருச்செங்கோடு - ஈசன், தன்னுடைய உடலில் பாதியை அம்பிகைக்கு அளித்து சிவன் பாதி, சக்தி பாதியாக காட்சி தரும் தலம். மலைமீது சுயம்பு உருவமாக ஈசனும், அம்பிகையும் உறைந்திருக்கும் தலம். உலகிலேயே உமையொரு பாகனாக ஈசன் காட்சி தரும் சிறப்பு மிக்க தலம். மலையே லிங்கமாக காட்சி தரும் தலம். இங்கு பெருமாளும் அருள்புரிவதால் இந்த மலையை கிரிவலம் வந்தால் கைலாயத்தையும், வைகுண்டத்தையும் வலம் வந்து வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.

**யம பயம் போக்கும் சிவ தலம்**

7. திருவாரூர் தியாகராஜர் கோவில் - கடவுள்கள் அனைவருக்கும் மகாராஜா என ஈசன் போற்றப்படும் தலம். ஆசியாவின் மிகப் பெரிய தேர் அமைந்துள்ள கோவில். சைவ மரபில் பெரிய கோவில் என போற்றப்படும் ஒரே கோவில். திருவாரூரில் பிறந்தே முக்தி என்பார்கள். இங்குள்ள நடராஜரின் திருமுகத்தையும், கரங்களையும் மட்டுமே தரிசிக்க முடியும். வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே பாதத்தை தரிசிக்க முடியும்.

8. அமிர்தகடேஸ்வரர் கோவில், திருக்கடையூர் - மார்கண்டேயருக்காக எமனையே ஈசன் வதம் செய்த தலம். தன்னுடைய பக்தனுக்காக அமாவாசை திதியில் அம்பிகை முழு நிலவு காட்டிய தலம். எம பயம் போக்கி, தீர்க்க ஆயுள் அருளக் கூடிய தலம். சொல்லிக் கொண்டே செல்லும் அளவிற்கு அளவில்லாத சிறப்புக்களை கொண்ட அற்புத தலம்.

**பாவம் போக்கும் புண்ணிய தலம் :**

9. ராமநாத சுவாமி கோவில், ராமேஸ்வரம் - இந்தியாவில் உள்ள முக்தி தலங்களில் ஒன்றாகவும், ஜோதிர்லிங்க தலங்களில் ஒன்றாகவும் விளங்கும் தலம். ஸ்ரீராமபிரானே தன்னுடைய பாவம் நீங்க வழிபட்ட தலம். அக்னி தேவர் உள்ளிட்ட பலரும் வழிபட்டு, பாவம் மற்றும் சாப நிவர்த்தி பெற்ற தலம். இங்குள்ள 22 தீர்த்தங்களில் நீராடி சிவனை வழிபட்டால் பித்ருதோஷம் உள்ளிட்ட அனைத்து தோஷங்களும் நீங்கும்.

10. நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி - தமிழகத்தில் உள்ள மிக பழமையான சிவ தலங்களில் இதுவும் ஒன்று. மரண பயத்தை போக்கி, தன்னுடைய பக்தர்களுக்கு காவலமாக இருந்து அருளக் கூடியவர் இத்தல ஈசன். ஈசன் நெல்லையப்பராகவும், அம்பிகை காந்திமதி அம்மனாகவும் அருள்புரியும் அற்புத தலம்.

-முனைவர்
இராம.வேதநாயகம்

# தினம் ஒரு தலைவர்கள் உசைன் அகமது மதானி வரலாறு






உசைன் அகமத் மதானி (1879 அக்டோபர் 6 - 1957 திசம்பர் 5 ) இவர் ஓர் இந்திய இஸ்லாமிய அறிஞராவார் . 1954இல் இந்தியாவின் குடிமை கௌரமான பத்ம பூசண் விருதினைப் பெற்ற முதல் நபர்களில் இவரும் ஒருவராவார். 1920களில் காங்கிரசு-கிலாபத் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவதில் மதானி முக்கிய பங்கு வகித்தார். மேலும் 1920கள் மற்றும் 1930களில் தொடர்ச்சியான சொற்பொழிவுகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம், இந்திய தேசிய காங்கிரசுடன் இந்திய உலமாக்களின் ஒத்துழைப்புக்கு களம் தயார் செய்தார். 1938 இல் இவர் எழுதிய முத்தாகிதா கௌமியாத் இஸ்ர் இஸ்லாம் என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் இந்தியாவின் பிரிவினையை எதிர்த்தது. அதில் மதானி ஒரு ஐக்கியப்பட்ட இந்தியாவுக்குள் ஒரு கலப்பு தேசியவாதத்தின் இலட்சியத்திற்காக வாதிட்டார். இது எந்தவொரு மதப் பகிர்வையும் விட முழு துணைக் கண்டத்திலும் தனது சமூகத்தின் பரவலுக்கும் செழிப்புக்கும் உகந்ததாக இருக்கும் என்று இவர் கருதினார்.

ஆரம்ப கால வாழ்க்கை உசைன் அகமது மதானி உத்தரபிரதேசத்தில் உன்னாவ் மாவட்டத்தில் பங்கர்மாவ் என்ற சிறிய நகரத்தில் பிறந்தார். இவர் பிறந்தபோது இவரது தந்தை பங்கர்மாவில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவரது குடும்பம் முதலில் பைசாபாத் மாவட்டத்தில் உள்ள தாண்டாவில் இருந்தது . நபிகள் நாயகத்தின் வழித்தோன்றலாக இருந்த இவரது தந்தையின் பெயர் சையித் ஹபீபுல்லா என்பதாகும்.

கல்வி மற்றும் ஆன்மீக பயிற்சி 1892ஆம் ஆண்டில், தனது பதின்மூன்றாவது வயதில், தாருல் உலூம் தேவ்பந்திற்குச் சென்றார். அங்கு இவர் முகமது ஹசன் என்பவரிடம் படித்தார். ஆழ்ந்த விஞ்ஞானங்களை முடித்த பின்னர், இவர் ரசீத் அகமத் கங்கோகியின் சீடரானார். பின்னர் சூபி பாதையில் மற்றவர்களுக்கு வழிகாட்ட இவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தொழில் தாருல் உலூம் தேவ்பந்தில் பட்டம் பெற்ற பிறகு, இவர் தனது குடும்பத்துடன் மதீனாவுக்கு குடிபெயர்ந்தார். இவர் அரபு இலக்கணம், உசுல் அல்-ஃபிக், உசுல் அல்-ஹதீஸ் மற்றும் குர்ஆனிய எக்ஸெஜெஸிஸ் ஆகியவற்றைக் கற்பிக்கத் தொடங்கினார். மதீனாவில் இந்த பல்வேறு இஸ்லாமிய அறிவியல்களை கற்பிக்க 18 ஆண்டுகள் செலவிட்டார். பின்னர் இவர் தலைமை ஆசிரியராகவும், தாருல் உலூம் தேவ்பந்தின் "ஷேகுல் ஹதீஸ்" ஆகவும் நியமிக்கப்பட்டார். இவர் சுமார் 28 ஆண்டுகள் இந்த பதவியில் பணியாற்றினார்.

சுதந்திரத்திற்கான முயற்சிகள் மால்ட்டா தீவில் உள்ள ஒரு சிறைக்கு பட்டுக் கடித இயக்கத்தில் பங்கு வகித்ததற்காக இவரது ஆசிரியர் முகமது ஹசனுக்கு ஆங்கிலேயர்கள் தண்டனை விதித்த பின்னர், மதானியும் அவருக்குத் துணையாக அவருடன் சிறை செல்ல முன்வந்தார்.

மூன்றுகளுக்குப் பின்னர் விடுதலையைத் தொடர்ந்து, இவர் இந்தியாவுக்குத் திரும்பி இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். கிழக்கு உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரைச் சேர்ந்த முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் மீது இவர் கணிசமான செல்வாக்கைக் கொண்டிருந்தார். புதுதில்லியின் ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் நிறுவனர் உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். ஷேகுல்-ஹிந்த் மௌலானா மகமது ஹசன் தலைமையிலான அடித்தளக் குழுவில் (ஜாமியா மில்லியா இஸ்லாமியாவின் அடித்தளத்திற்காக) 1929 அக்டோபர் 29 அன்று சந்தித்தார். இவர் இரு நாடுகளின் விரிவினைக்கு எதிராக இருந்த்தால் கிழக்கு உ.பி. மற்றும் பீகாரில் இருந்து ஏராளமான முஸ்லிம்கள் இந்தியப் பிரிவினையின் போது பாக்கித்தானுக்கு குடியேற மறுத்துவிட்டனர். இவர் 1957 இல் இறக்கும் வரை ஜாமியத் உலமா-இ-ஹிந்தின் தலைவராக இருந்தார். (இவர் இறக்கும் வரை தாருல் உலூம் தேவ்பந்தில் ஷேகுல் ஹதீஸின் பதவியையும் வகித்தார்)..

விருதுகள் மற்றும் அங்கீகாரம் 1954 இல் இந்திய அரசால் பத்ம பூசண் விருது இந்தியா அஞ்சல் துறை 2012 ஆம் ஆண்டில் இவரது நினைவாக ஒரு நினைவு தபால்தலை வெளியிட்டது வங்காளதேசத்தின் சில்ஹெட்டில் இவரது முயற்சிகள் மற்றும் கடின உழைப்பால் 'மதானி சத்தர்' என்ற பெயரிடப்பட்ட அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மரணம் மற்றும் மரபு மௌலானி மதானி 1957 திசம்பர் 5 அன்று இறந்தார்.

# அமித் ஷா பற்றி அவதூறு பேச்சு: ராகுல் காந்தி வாக்குமூலம் பதிவு

புதுடெல்லி, பிப்.22:

கடந்த 2018 கர்நாடக சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, பாஜக தேசிய தலைவராக இருந்த அமித் ஷாவை ராகுல் காந்தி விமர்சனம் செய்தார்.

"பாஜக தூய்மையான அரசியலை நம்புவதாக கூறினாலும், கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அக்கட்சியின் தலைவராக உள்ளார்" என சாடினார். சொராபுதீன் ஷேக் போலி என்கவுன்ட்டர் வழக்கின் அடிப்படையில் ராகுல் இதை கூறியிருந்தார். ஆனால் 2014-ம் ஆண்டிலேயே அவ்வழக்கில் இருந்து அமித் ஷா விடுவிக்கப்பட்டிருந்ததால் ராகுலுக்கு எதிராக உ.பி. சுல்தான்பூர் நீதிமன்றத்தில் உள்ளூர் பாஜக தலைவர் விஜய் மிஸ்ரா அவதூறு வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் ராகுல் 2024 பிப்ரவரியில் சரண் அடைந்து ஜாமீன் பெற்றார். 2024 ஜூலையில் ஆஜராகி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார். இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணையை தொடர்ந்து, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313-ன் கீழ் நேரில் விசாரணைக்கு ஆஜராக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் ராகுல் நேற்று சுல்தான்பூர் நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் தொடர்பாக தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதன்பின் நீதிமன்ற வளாகத்தை விட்டு ராகுல் வெளியேறினார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 9-ம் தேதி நடைபெற உள்ளது.

# ஏஐ வளர்ச்சி மற்றும் முக்கிய தாதுக்களை பெற பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் சேர இந்தியா ஒப்பந்தம்

புதுடெல்லி, பிப்.22:

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்காகவும் முக்கிய தாதுக்களை பகிர்ந்து கொள்ளவும் உருவாக்கப்பட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இணைய இந்தியா ஒப்பந்தம் செய்தது.

பாக்ஸ் சிலிக்கா என்பது செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி மற்றும் செமிகண்டக்டர்களுக்கான உலகளாவிய விநியோகத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவால் தொடங்கப்பட்ட கூட்டணியாகும். இதில் ஆஸ்திரேலியா, கிரீஸ், இஸ்ரேல், ஜப்பான், கத்தார், தென் கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இங்கிலாந்து ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. டெல்லியில் நடைபெறும் ஏஐ உச்சிமாநாட்டில் அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் இந்தியா நேற்று ஒப்பந்தம் செய்தது. இதன் மூலம் அரிய வகை தாதுக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு விநியோகத்துக்கு சீனாவை சார்ந்திருப்பது குறையும். அடுத்த தலைமுறை தொழில்துறைகளுக்குத் தேவையான முக்கிய ஆதாரங்களைப் பாதுகாப்பான முறையில் பெறுவது, தொழில்நுட்பத்துறைப் மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ள நிலையில், அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறிய தாவது: இந்தியா இப்போது பாக்ஸ் சிலிக்காவின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. இது இந்தியாவின் மின்னணு மற்றும் செமிகண்டக்டர் தொழில் துறைக்கு மிகவும் பயனளிக்கும். இந்தியாவில் ஏற்கனவே பத்து செமிகண்டக்டர் ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில், முதல் செமிகண்டக்டர் ஆலை வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கவுள்ளது என அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

# காங்கிரஸ் ஆட்சியில் எல்லைகள் திறந்து கிடந்ததே ஊடுருவலுக்கு காரணம் : மத்திய அமைச்சர் அமித் ஷா

புதுடெல்லி, பிப்.22:

காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் எல்லைகள் திறந்து கிடந்ததே ஊடுருவலுக்கு வழிவகுத்தது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றஞ்சாட்டினார்.




விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள அஸ்ஸாம் மாநிலத்துக்கு வெள்ளிக்கிழமை வருகை தந்த மத்திய அமைச்சர் அமித் ஷா, கசார் மாவட்டத்தில் வங்கதேச எல்லையையொட்டிய நாதன்பூர் கிராமத்தில் 'துடிப்பான கிராமங்கள்' இரண்டாம் கட்ட திட்டத்தை தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், பாகிஸ்தான் மற்றும் வங்கதேச எல்லையையொட்டியபல்வேறு மாநிலங்களில் 1,954 கிராமங்கள் விரிவாக மேம்படுத்தப்பட உள்ளன. நிகழ்ச்சியில் அமித் ஷா பேசியதாவது:

அஸ்ஸாமில் முந்தைய காங்கிரஸ் ஆட்சியின்போது, எந்த வளர்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. இப்போது நாட்டிலேயே அதிகபட்சமாக தினமும் 14 கி.மீ. தொலைவுக்கு சாலைகள் இங்கு கட்டமைக்கப்படுகின்றன.

காங்கிரஸ் ஆட்சியில் எல்லைகள் திறந்து கிடந்தன; இதுவே, நாட்டுக்குள் ஊடுருவலுக்கு வழிவகுத்தது. முன்பு எல்லையோர கிராமங்கள், நாட்டின் கடைசி கிராமங்களாக கருதப்பட்டன. வளர்ச்சி, வேலைவாய்ப்பு, கல்வி, மின்விநியோகம், சாலை, தொலைத்தொடர்பு வசதிகளில் பின்தங்கியிருந்தன. பிரதமர் மோடியின் தீர்க்கம்: அதேநேரம், எல்லையோர கிராமங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்; அந்தக் கிராமங்களில் வாழும் மக்களுக்கு வாழ்வாதாரம் உள்பட அனைத்து வசதிகளையும் வழங்க வேண்டும் என்று தீர்க்கமாக முடிவெடுத்தவர் பிரதமர் மோடி. துடிப்பான கிராமங்கள் திட்டம், எல்லையோர கிராமங்களில் மக்களின் இடப்பெயர்வை தடுக்கவும், சாவதேச எல்லைகள் வழியே ஊடுருவலைத் தடுத்து நிறுத்தவும் தொடங்கப்பட்டதாகும்.

ரூ.6,900 கோடி மதிப்பீட்டிலான இரண்டாம் கட்ட திட்டத்தின் மூலம் அஸ்ஸாமில் 140 கிராமங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. நாட்டின் பிற பகுதிகளில் உள்ள அதே வசதிகள் இந்த கிராமங்களுக்கும் கிடைக்கும். அத்தியாவசிய உள்கட்டமைப்புகள், நிலையான வாழ்வாதார வாய்ப்புகள், பாதுகாப்பு, இணைப்பு வசதிகள் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்றார் அமித் ஷா.

# சுங்கச்சாவடிகளில் ஏப். 1 முதல் ஃபாஸ்டேக், யுபிஐ மட்டுமே அனுமதி

புதுடெல்லி, பிப்.22:

நாடு முழுவதும் உள்ள சுங்கச்சாவடிகளில் வரும் ஏப். 1-ஆம் தேதி முதல், ஃபாஸ்டேக் அல்லது யுபிஐ போன்ற எண்மப் பரிவர்த்தனை முறைகளில் மட்டுமே சுங்கக்கட்டணம் வசூலிக்கப்படும் என்று இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்எச்ஏஐ) அறிவித்துள்ளது.




தற்போது 98 சதவீதத்துக்கும் அதிகமான வாகன ஓட்டிகள் ஃபாஸ்டேக் முறையைப் பயன்படுத்தினாலும், ஒரு சில வாகன ஓட்டிகள் இன்னும் சுங்கக்கட்டணத்தைப் பணமாகவே செலுத்துகின்றனர்.

இதனால் சுங்கச்சாவடிகளில் வாகன நெரிசல் ஏற்படுவதோடு, மீதிப் பணம் கொடுப்பதில் காலதாமதமும்; வாக்குவாதங்களும் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்கவும், தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்யவும் இந்த முழுமையான எண்மப் பரிவர்த்தனை முறை அமல்படுத்தப்பட உள்ளது.

தற்போது விதிகளின்படி ஃபாஸ்டேக் இல்லாத வாகனங்கள், ரொக்கமாக பணம் செலுத்தினால் இருமடங்கு சுங்கக்கட்டணமும், யுபிஐ மூலம் செலுத்தினால் 1.25 மடங்கு கட்டணமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஏப். 1 முதல் ரொக்கப் பரிவர்த்தனை முழுமையாக நிறுத்தப்படுவதால், அனைத்து வாகன உரிமையாளர்களும் கட்டாயம் எண்ம பரிவர்த்தனை முறைக்கு மாற வேண்டியது அவசியமாகிறது.

இந்தத் திட்டம் அமலுக்கு வரும்போது, நாடு முழுவதும் உள்ள 1,150-க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் காத்திருக்காமல் விரைவாகச் செல்ல முடியும். இது எரிபொருள் சேமிப்பு மற்றும் வெளிப்படையான கட்டண வசூலுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்று நெடுஞ்சாலை ஆணையம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# மெட்ரோ முன்பாய்ந்து சிறுவன் தற்கொலை

புதுடெல்லி, பிப்.22:

உத்தம் நகர் மெட்ரோ நிலையத்தில் வெள்ளிக்கிழமை வந்துகொண்டிருந்த மெட்ரோ ரயில் முன்பாக 17 வயது சிறுவன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: காலை 11.07 மணியளவில் துவாரகா நிலையத்திலிருந்து உத்தம் நகர் மெட்ரோ நிலையத்தின் நடைமேடை 1-இல் ரயில் வந்து கொண்டிருந்தது. அப்போது, நடைமேடையில் இருந்த நபர், ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டதாக நிலைய கட்டுப்பாட்டு அறையிலிருந்து காவல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, மெட்ரோ பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் தண்டவாளத்திலிருந்து அவரை மீட்டனர். விசாரணையில், உயிரிழந்தவர் நஜாஃப்கர் பகுதியைச் சேர்ந்த அஸ்வின் தாகா் எனக் கண்டறியப்பட்டது. 12-ஆம் வகுப்பை நிறைவு செய்த அவர், போட்டித்தேர்வுகளுக்காகப் படித்து வந்தார்.

அந்தச் சிறுவன் தனிப்பட்ட பிரச்னைக்காக கடந்த சில நாள்களாக கவலையில் இருந்தது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது. அவருடைய பெற்றோருக்கு அவர் ஒரே மகனாவார். சிறுவனின் தந்தை தில்லி போக்குவரத்து கழகத்தில் (டிடிசி) ஒப்பந்த ஓட்டுநராகப் பணிபுரிகிறார். சிறுவனின் உடல் தீன்தயாள் உபாத்யாய் மருத்துவமனைக்கு உடல்கூறாய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தை மெட்ரோ நிறுவனத்தின் மூத்த அதிகாரிகள் பார்வையிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பல கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது என்றனர் அந்த அதிகாரிகள்.

# கால்பந்து விளையாடிய மேகாலயா எம்.பி. உயிரிழப்பு

ஷில்லாங், பிப்.22:

மேகாலயா தலைநகர் ஷில்லாங்கிலுள்ள கால்பந்து மைதானத்தில் 5 பேர் விளையாடக் கூடிய புட்சால் கால்பந்து விளையாட்டை ஷில்லாங் தொகுதி எம்.பி. ரிக்கி ஆண்ட்ரு விளையாடினார்.

அப்போது மைதானத்தில் அவர் திடீரென சுருண்டு விழுந்தார். இதையடுத்து அவரை அருகிலுள்ள மருத்துவமனையில் அவரது நண்பர்கள் சேர்த்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். அவரது மறைவுக்கு பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், மேகாலயா முதல்வர் கான்ராட் கே.சங்மா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். ரிக்கி ஆண்ட்ரு உயிரிழந்ததைத் தொடர்ந்து நேற்று மேகாலயா பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

# கர்நாடகாவில் சிவாஜி ஜெயந்தி பேரணியில் கல்வீச்சு: பாகல்கோட்டையில் 144 தடை உத்தரவு



பெங்களூரு, பிப்.22:

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டத்தில் உள்ள நியூ டவுனில் நேற்று முன் தினம் இரவு சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணி நடைபெற்றது. கிலா காளி பகுதியில் உள்ள மசூதி அருகே பேரணி சென்றபோது மர்ம நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் கூட்டத்தில் வந்த இளைஞர்களும் கற்களை வீசியதால் இருதரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதுகுறித்து தகவலறிந்த பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்தனர். இரு தரப்பினர் மீதும் லேசான தடியடி நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நியூ டவுன் பகுதியில் உள்ள இறைச்சி கடைகள் மீது சிலர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 500-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அங்கு சனிக்கிழமை இரவு 12 மணி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கடற்படை: பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த இளைஞர் கைது


பெங்களூரு, பிப்.22:

கேரள மாநிலத்தை சேர்ந்த கொச்சின் ஷிப் யார்டு கப்பல் கட்டும் நிறுவனத்தின் கிளை கர்நாடகாவில் உள்ள உடுப்பி மல்பே கடற்கரையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நாட்டின் கடற்படைக்கு சொந்தமான கப்பல் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த கப்பல் கட்டும் தளம் குறித்த தகவல்கள், புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புக்கு அனுப்பப்படுவதாக கடந்த ஆண்டு நவம்பரில் தகவல் வெளியானது. இதுகுறித்து கொச்சின் ஷிப் யார்டு நிறுவனம் அளித்த புகாரின்பேரில் உடுப்பி போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அதில் கொச்சின் ஷிப் யார்டு நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றும் சிலர் உளவாளிகளாக செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர்களின் செல்போன் எண்கள், சமூக வலைதளங்களை போலீஸார் ஆய்வு செய்தனர்.

அதில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த நவம்பரில் உத்தர பிரதேசத்தை சேர்ந்த ரோஹித் (23), சான்ட்ரி (26) ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், "குஜராத்தை சேர்ந்த ஹிரேந்திர குமார் அவர்களுக்கு சிம் கார்டு வாங்கி போலி வாட்ஸ் அப் கணக்குகளை உருவாக்கி கொடுத்தது தெரியவந்தது. இதையடுத்து ஹிரேந்திர குமாரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணைக்குப் பின் மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த அலிப் இஸ்லாம் (21) என்ற இளைஞரை கேரளாவில் உள்ள இடுக்கியில் நேற்று முன் தினம் கைது செய்தனர். அவரை உடுப்பிக்கு அழைத்து வந்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அலிப் இஸ்லாம் மேற்கு வங்க முகவரியில் அடையாள அட்டை வைத்துள்ள போதும், அவர் வங்கதேசத்தை சேர்ந்தவராக இருக்கலாம் என போலீஸார் சந்தேகிக்கின்றனர். எனவே அவரை 7 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

# ஏஐ மாநாட்டு பிரமுகர்களுக்கு பிரதமர் சிறப்பு விருந்து



புதுடெல்லி, பிப்.22:

டெல்லியில் நடைபெறும் ஏஐ உச்சி மாநாட்டில் பங்கேற்ற உலகத் தலைவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த அக்கறையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வாமை இல்லாத மதிய உணவை நேற்று முன்தினம் வழங்கினார்.

ஏஐ உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பாரத மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இந்த மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. மாநாட்டில் பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். இந்த மாநாட்டின் 4-ம் நாளான நேற்று முன் தினம் ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் மற்றும் கூகுள் நிறுவனத்தின் சுந்தர் கே.பிச்சை, ஓபன்ஏஐ நிறுவனத்தின் சாம் ஆல்ட்மேன் உள்ளிட்ட சிஇஓக்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு பாரத் மண்டபத்தில் மதியம் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்து அளித்தார்.

ஒவ்வாமை ஏற்படாத வகையில் பால், கோதுமை அல்லது உலர் கொட்டைகள் இல்லாமல் இவை தயாரிக்கப்பட்டிருந்தன. சர்வதேச பிரதிநிதிகளுக்காக மிகுந்த கவனமுடன் மெனு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் நம் நாட்டின் வளமான சமையல் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாக இது இருந்தது. தினை, பருப்பு, தாமரை தண்டு, பாஸ்மதி அரிசி, குங்குமப்பூ போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டு முற்றிலும் சைவ உணவு பரிமாறப்பட்டது.

ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்ட அதே வேளையில் இந்தியாவின் பிராந்திய சுவைகளை விருந்தினர் அனுபவிக்கும் வகையில் இவை தயாரிக்கப்பட்டிருந்தன. உ.பி. மற்றும் பிஹாரில் பிரபலமான நிமோனா கேபர், காஷ்மீரின் நட்ரு குர்குரி, ஹைதராபாத்தின் ஜால்ப் ரானி சப்ஸ் புலாவ் உள்ளிட்ட உணவுகள் மற்றும் பல வகை சாலட்கள் மற்றும் இனிப்புகள் பரிமாறப்பட்டன.

# பிரதமர் மோடியுடன் இலங்கை அதிபர் அனுர குமார திசாநாயக்க சந்திப்பு

புதுடெல்லி, பிப்.22:



டெல்லியில் நடைபெறும் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் நரேந்திர மோடியை, இலங்கை அதிபர் அனுர குமார திசாநாயக்க சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அனுர குமார திசாநாயக்க, "புதுடெல்லியில் இன்று (பிப்.20) மதியம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தேன். 2026 ஆம் ஆண்டுக்கான ஏஐ தாக்க உச்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்டதற்கு நான் அவருக்கு நன்றி தெரிவித்தேன்.

நமது வரலாற்று உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து நாங்கள் விரிவான விவாதங்களை நடத்தினோம். சமீபத்திய டித்வா புயலின் போது இந்தியா அளித்த மிகப் பெரிய ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவித்தேன்" என குறிப்பிட்டுள்ளார்.

அனுர குமார திசாநாயக்க உடனான சந்திப்பு குறித்து தனது சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, "மதிப்புமிக்க அண்டை வீட்டாருடன் நட்பை வலுப்படுத்துதல்! டெல்லியில் அதிபர் அனுர குமார திசாநாயக்கவை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது. இந்தியா-இலங்கை இடையேயான உறவில் சமீபத்திய முன்னேற்றம் குறித்து நாங்கள் மதிப்பாய்வு செய்தோம்.

எரிசக்தி, இணைப்பு, உள்கட்டமைப்பு, சுகாதாரம், திறன் மேம்பாடு, கலாச்சாரம், நீலப் பொருளாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம்" என தெரிவித்துள்ளார்.

# மே.வங்க எஸ்ஐஆர் பணியில் நீதிபதிகள் நியமனம்: உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.22:

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெறுகிறது. இதை எதிர்த்து அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த சூழலில் எஸ்ஐஆர் பணி தொடர்பான முரண்பாடுகள் மற்றும் ஆட்சேப மனுக்களை பரிசீலிக்க மாவட்ட நீதிபதிகள், மாவட்ட முன்னாள் நீதிபதிகளை பணியில் அமர்த்த கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. "எஸ்ஐஆர் விவகாரத்தில் மேற்குவங்க அரசுக்கும் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கும் இடையே நம்பிக்கை அற்ற சூழல் நிலவுவதை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபடும் மாவட்ட நீதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க உத்தரவிடுகிறோம். எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியது தொடர்பாக கூடுதல் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய டிஜிபிக்கு உத்தரவிடுகிறோம்" என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.




# சென்னையில் பைக் திருடி திருவண்ணாமலையில் விற்பனை செய்த 3 பேர் கைது

**சென்னை, பிப்.22:** பைக்குகளை சென்னையில் திருடி, திருவண்ணாமலையில் விற்பனை செய்து வந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். கொளத்தூர், அஞ்சுகம் நகர் 3-வது குறுக்கு தெருவில் வசித்து வருபவர் ஜெயபாரதி (34).

தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். கடந்த 6-ம் தேதி இரவு, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவரது பைக் திருடுபோனது. இது தொடர்பாக ஜெயபாரதி கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியைச் சேர்ந்த ஜெகதீஷ் (19) என்பவர் 2 சிறுவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் ஜெயபாரதியின் பைக்கை திருடியது தெரியவந்தது.

இதையடுத்து கடந்த 18-ம் தேதி ஜெகதீஷ் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது கூட்டாளிகளான 2 சிறுவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 6 பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில் கைது செய்யப்பட்ட 3 பேரும் சென்னை மட்டும் அல்லாமல் பல்வேறு இடங்களில் பைக்குகளை திருடி அதை திருவண்ணாமலை பகுதியில் விற்பனை செய்து வந்தது தெரிந்தது. இதையடுத்து, ஜெகதீஷ் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் கூர்நோக்கு இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# பாஜக நிர்வாகி அமர்பிரசாத் ரெட்டிக்கு கொலை மிரட்டல்: போலீஸார் தீவிர விசாரணை



**சென்னை, பிப்.22:** வேலூர் மேல்விஷாரத்தை அடுத்த கீழ்விஷாரம் பகுதியில் கடந்த 14-ம் தேதி வேலூர் இப்ராஹிம் தலைமையில் பாஜக தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாஜக மாநிலச் செயலாளர் அமர்பிரசாத் ரெட்டி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்ற சில நாட்களிலேயே, அவருக்கு அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக டிஜிபி அலுவலகத்துக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் வந்துள்ளது.

அதில், "முஸ்லிம்கள் எப்போதும்பாஜகவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். நிகழ்ச்சியில் பங்கேற்ற அமர்பிரசாத் ரெட்டி, பிரதமர் மோடியை ஆதரித்துப் பேசினார். எங்கள் சமூகத்துக்கு எதிராக பேச யாரையும் அனுமதிக்க மாட்டோம்.

கணிக்க முடியாத நேரத்தில் அவரது இல்லத்தில் 2 கிலோ ஆர்டிஎக்ஸை வைப்போம். தமிழகத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக பேச அனுமதி அளித்த போலீஸாருக்கு இது ஒரு சவால்.

உங்களால் முடிந்தால், அமர் பிரசாத் ரெட்டியை காப்பாற்ற முயற்சிக்கவும்" என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மிரட்டல் மின்னஞ்சல் தொடர்பாக தீவிரவாத தடுப்பு பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து வேலூர் இப்ராஹிமிடம் கேட்டபோது, "மக்களிடையே நாங்கள் கொண்டு செல்லும் கருத்துகளை பொறுத்துக்கொள்ள முடியாத சில சக்திகள், எனக்கும் அமர் பிரசாத் ரெட்டிக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளன. இது போன்ற மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சப்போவதில்லை. இந்த மிரட்டல்கள் குறித்து விரைவில் டிஜிபி-யிடம் புகார் அளிக்க உள்ளோம்" என்றார்.

# ஆண்டிபட்டி அருகே பேருந்து கவிழ்ந்து விபத்து 41 பேர் படுகாயம்



**ஆண்டிபட்டி, பிப்.22:** தேனி மாவட்டம் போடியிலிருந்து நேற்று காலை மதுரை நோக்கி தனியார் பேருந்து 50-க் கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. பகல் 12 மணியளவில் ஆண்டிபட்டியைக் கடந்து டி.பொம்மிநாயக்கன் பட்டி விலக்கு அருகே பேருந்து சென்றது.

அப்போது, திருமங்கலத்தில் திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு வடுகபட்டி நோக்கி வந்து கொண்டிருந்த கார் மீது தனியார் பேருந்து நேருக்கு நேர் மோதியது. இதில் பேருந்து திசைமாறி அருகில் உள்ள மரத்தில் மோதி தலைகுப்புறக் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பேருந்தின் பெரும்பகுதி சேதமடைந்த நிலையில், உள்ளே இருந்த பயணிகள் அலறினர். அருகில் இருந்தவர்கள் கண்ணாடியை உடைத்து பயணிகளை மீட்டனர்.

காயமடைந்த பேருந்து பயணிகள் 37 பேர், காரில் வந்த 4 பேர் மீட்கப்பட்டு, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பலத்த காயமடைந்த அல்லி நகரம் அசோக்குமார் (40), விருதுநகர் கணேஷ்ராம் (49), பண்ணைப்பட்டி போஸ் (30), மேல்மங்கலம் ராமையா (79), ஸ்ரீரங்கபுரம் கணேசன் (62), உத்தமபாளையம் சுபாஷினி (26) உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

# கோயில் விழா அழைப்பிதழில் சாதி பெயர் கூடாது: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, பிப்.22:** கோயில் திருவிழாக்களுக்கான அழைப்பிதழ்களில் உபயதாரர்களின் பெயரில் சாதி பெயர் இடம் பெறக் கூடாது என சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருப்போரூர், கந்தசுவாமி கோயில் மாசி பிரம்மோற்சவ விழாவுக்கான அழைப்பிதழில் சாதிப் பெயர்களை பயன்படுத்த தடை விதிக்கக் கோரி திருப்போரூரை சேர்ந்த சமரன் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, விழா அழைப்பிதழில் உபய தாரர்களின் பெயர்கள் சாதிப் பெயருடன் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு, அறநிலையத்துறை நடத்தும் விழாவில், சாதி பெருமையை ஊக்குவிப்பதை அனுமதிக்க முடியாது.

அடுத்த விழாக்களின் போது அச்சிடப்படும் அழைப்பிதழ்களில் உபயதாரர்களின் பெயர்கள் மட்டுமே இடம் பெற வேண்டும்.

சாதி பெயர்கள் இடம்பெறக் கூடாது என உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்துள்ளார்.

மேலும், அந்த உத்தரவில், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என சொல்லும் நிலையில், பிறப்பால் மட்டுமே சாதி வருகிறது.

பிறப்பு மட்டுமே மக்களை பிளவுபடுத்துகிறது. நாட்டில் சாதியை ஒழிக்க ஒவ்வொரு அதிகாரிகளும் முயற்சிக்க வேண்டுமே தவிர, அதை பெரிதுபடுத்தக் கூடாது எனவும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

# எப்.சி. கட்டண உயர்வை நிறுத்திவைக்க உத்தரவு: மாநில அளவிலான லாரிகள் வேலைநிறுத்தம் வாபஸ்



**நாமக்கல், பிப்.22:** தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளன தலைவர் தனராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம், இருசக்கர வாகனம், கார், லாரிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்கும் டிச. 17 முதல் தகுதிச் சான்றிதழ் கட்டணத்தை (எப்.சி.) உயர்த்தி அறிவித்தது.

வாகனத்தின் தயாரிப்பு ஆண்டை அடிப்படையாக கொண்டு எப்.சி. கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டது. பல மாநிலங்கள் கட்டண உயர்வை நிறுத்தி வைத்துள்ள நிலையில், தமிழகத்திலும் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும் என்று முதல்வர், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

எங்கள் கோரிக்கை ஏற்கப்படவில்லை. உயர்த்தப்பட்ட கட்டணத்தை செலுத்தி எப்.சி. பெற முடியாமல் மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட லாரிகள் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கடந்த 17-ம் தேதி நாமக்கல்லில் நடைபெற்ற சம்மேளன செயற்குழுக் கூட்டத்தில், தமிழகத்தில் எப்.சி. கட்டண உயர்வை திரும்பப் பெறக்கோரி பிப். 25 முதல் மாநிலம் முழுவதும் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

லாரிகள் வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்ட 8 மணி நேரத்தில், 3 மாதங்களுக்கு எப்.சி.க்கு புதிய கட்டணம் வசூலிப்பதை தற்காலிமாக நிறுத்தி வைத்து, பழைய கட்டணமான ரூ.800 மட்டும் செலுத்தி லாரிகளுக்கு எப்.சி. சான்று பெறலாம் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மேலும், போக்குவரத்து ஆணையர் மற்றும் சம்மேளன நிர்வாகிகள் அடங்கிய குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளதால், அக்குழுவின் கூட்டத்தில் 3 மாதத்தில் எப்.சி. கட்டணம் நிர்ணயிப்பது தொடர்பாக பேசி முடிவு செய்யலாம் என்றும் மாநில போக்குவரத்து ஆணையர் உறுதியளித்துள்ளார்.

எனவே, வரும் 25-ம் தேதி முதல் நடைபெறவிருந்த லாரிகள் வேலைநிறுத்தப் போராட்டம் தள்ளி வைக்கப்படுகிறது. லாரிகள் வழக்கம் போல இயங்கும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியாசர்பாடியில் 800 ஆண்டு பழமையான இரவீஸ்வரர் கோயிலில் இன்று கும்பாபிஷேகம்




**சென்னை, பிப். 22:** வியாசர்பாடியில் சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரகதாம்பாள் உடனுறை இரவீஸ்வரர் கோயில் உள்ளது. சோழர் காலத்துக் கட்டிடக்கலைக்கும் ஆன்மிகச் சிறப்புக்கும் இக்கோயில் ஒரு சான்றாக விளங்கி வருகிறது பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, இந்து சமய அறநிலைய துறை சார்பில் நவீன 'ஜாக்கி' தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி, ஒட்டுமொத்தக் கோயிலையும் தரைமட்டத்துக்கு உயர்த்திப் பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேநேரத்தில் கோயில் புனரமைப்புப் பணிகளும், புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வந்தன. இந்நிலையில், இப்பணிகள் அனைத்தும் நிறைவுற்ற நிலையில், நாளை (பிப்.22) மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அந்த வகையில், கும்பாபிஷேக விழா கடந்த 16-ம் தேதி கணபதி பிரார்த்தனை, தேவதா அனுக்ஞை, யஜமான சங்கல்பத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து, கோ பூஜை, மகா கணபதி ஹோமம், தன பூஜை, நவகிரக ஹோமம், அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், ஆச்சார்ய வர்ணம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், கலச புறப்பாடு மற்றும் முதல் கால பூஜை நடந்தது. அதனைத் தொடர்ந்து, நேற்று காலை விஷேச சந்தி, இரண்டாம் கால பூஜை, மூன்றாம் கால பூஜை நடைபெற்றது.

இதையடுத்து, இன்று (21-ம் தேதி) நான்காம் கால பூஜை, பூர்ணா ஹூதி, ஐந்தாம் கால பூஜை நடைபெறுகிறது. இந்நிலையில், விழாவின் முக்கிய நிகழ்வான மகா கும்பாபிஷேகம் பிப். 22-ம் தேதி (நாளை) நடைபெறுகிறது. நாளை காலை 5 மணிக்கு ஆறாம் கால பூஜை, அவப்ருத யாகம், பரிவார யாக சாலை பூர்ணாஹூதி, ப்ரதான யாகசாலை, மஹா பூர்ணாஹூதி கலச புறப்பாடு நடைபெறுகிறது.

இதையடுத்து, நாளை காலை 8.30 மணிக்கு ராஜகோபுரம் அனைத்து விமானங்களுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. பின்னர், காலை 9 மணிக்கு மூலவர் சுவாமி அம்பாள் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

தொடர்ந்து, மாலை 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும், அதனை தொடர்ந்து 9 மணிக்கு பஞ்சமூர்த்தி திருவீதி உலாவும் நடைபெறுகிறது. கோயில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை, கோயில் செயல் அலுவலர் மா.ஆச்சி சிவப்பிரகாசம், மேலாளர் சு.தனசேகர் உள்ளிட்ட கோயில் அலுவலர்கள் முன்னின்று மேற்கொண்டு வருகின்றனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 89.25 அடியாக சரிவு

**மேட்டூர், பிப்.22:** காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை தணிந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தும், சரிந்தும் காணப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து கடந்த 2 நாட்களாக மாற்றமின்றி விநாடிக்கு 61 கன அடியாக நீடிக்கிறது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

தண்ணீர் திறப்பைவிட நீர்வரத்து குறைவாக உள்ளதால் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. மேட்டூர் அணை நீர்மட்டம் 89.46 அடியிலிருந்து 89.25 அடியாகவும், நீர் இருப்பு 52.03 டிஎம்சியிலிருந்து 51.80 டிஎம்சியாகவும் குறைந்துள்ளது.

# சென்னை கடற்கரை - தாம்பரம் ரயில் சேவை கடும் பாதிப்பு: ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டதால் பயணிகள் அவதி



**சென்னை, பிப்.22:** குறைக்கப்பட்ட சேவைகள், புதிய இயக்க முறை காரணமாக கடற்கரை- தாம்பரம் வழித்தடத்தில் ரயில் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

சென்னை - தாம்பரம் மின்சார ரயில் வழித்தடத்தில் எழும்பூர் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகள் காரணமாக ஏப்.5-ம் தேதி வரை புறநகர் ரயில் சேவைகள் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வழக்கமாக தினமும் 204 முறை எழும்பூர் வழியாக மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதாவது, ஒவ்வொரு 10-12 நிமிடங்களுக்கு ஒரு ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் பராமரிப்புப் பணிகள் காரணமாக எழும்பூரில் வழக்கமாக புறநகர் ரயில்கள் நின்று செல்லும் 10 மற்றும் 11-வது நடைமேடைக்கு பதிலாக, 5 மற்றும் 6-வது நடைமேடைகளில் ரயில்கள் நின்று செல்லும் என்றும், 204 முறை ரயில்கள் இயக்கப்படுவதற்கு பதில், 164 முறை மட்டுமே இயக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ரயில் சேவைகள் குறைக்கப்பட்டதால் நேற்று காலை முதல் பயணிகள் பாதிப்புக்குள்ளாகினர். இதற்கிடையே சிக்னல் பிரச்சினை காரணமாக நேற்று அதிகாலையில் இருந்தே, கடற்கரை முதல் தாம்பரம்வரை இயக்கப்பட்ட புறநகர் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.

ஒரே தண்டவாளத்தில் 2 ரயில்கள் எதிரெதிராகவும், ஒன்றன்பின் ஒன்றாகவும் என பல்வேறு குளறுபடிகளும் ஏற்பட்டன.

இதன் காரணமாகபள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலகங்களுக்கு செல்வோர் கடும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

இதுகுறித்து ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: 5 முதல் 15 நிமிட தாமதம் எழும்பூர் ரயில் நிலைய பராமரிப்பு பணி காரணமாக புறநகர் ரயில்கள் நின்று செல்லும் நடைமேடைகள் மாற்றப்பட்டுள்ளன.

இதனால் கடற்கரையில் இருந்து தாம்பரம் நோக்கி செல்லும் ரயில்கள் எழும்பூர் அடுத்த சேத்துப்பட்டுக்கு செல்லும்போது தண்டவாளங்களைக் கடக்க வேண்டும்.

வழக்கமான 10 மற்றும் 11-வது நடைமேடையில் செல்லும்போது இந்த பிரச்சினை ஏற்படாது, தற்போது விரைவு ரயில்கள் செல்லும் 5 மற்றும் 6-வது நடைமேடையில் இருந்து புறநகர் செல்லும் ரயில் தண்டவாளங்களுக்கு மாறுவதற்கு கூடுதல் நேரம் எடுக்கும்.

அதன்படி, சேத்துப்பட்டில் இருந்து எழும்பூருக்கும், எழும்பூரில் இருந்து சேத்துப்பட்டுக்கும் வழக்கமாக 2 அல்லது 3 நிமிடங்களில் செல்ல வேண்டிய ரயில் 5 முதல் 15 நிமிடங்கள் வரை தாமதமாகிறது.

இதனால் ரயில்கள் சேத்துப்பட்டு மற்றும் பூங்கா ரயில் நிலையங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது.

இதன் காரணமாக ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. இவ்வாறு அவர்கள் கூறினர். இந்த ரயில்கள் சேவை குறைப்பு குறித்து கடந்த சில நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மாநகரப் போக்குவரத்து கழகம் சார்பில் ராயபுரம் - கிளாம்பாக்கம், தாம்பரம் - செங்கல்பட்டு இடையே கூடுதலாக 50 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இருப்பினும் நேற்று காலை பெரும்பாலானோர் வழக்கம் போல் ரயில்களில் பயணித்தனர்.

சேத்துப்பட்டு ரயில் நிலையத்தில் ஒரு ரயில் நின்றிருந்த போது, அதன் பின்னாலேயே மற்றொரு ரயில், ரயில் நிலையத்துக்கு வெளியே காத்திருந்தது, இதேபோன்று, பல ரயில் நிலையங்களில் ரயில்கள் அணிவகுத்து நின்றன.

இதனால் பயணிகள் ஆங்காங்கே நின்ற ரயில்களில் இருந்து கீழே குதித்து ஆபத்தான முறையில்தண்டவாளங்களில் நடந்து சென்று ரயில் நிலையங்களை அடைந்து பின்னர் மாற்று போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தினர்.

எனவே, ரயில் நிலையங்களில் இதுபோன்ற பெரிய அளவிலான மாற்றங்களை செய்யும்போது முறையாக திட்டமிட்டு பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ரயில்வேநிர்வாகம் மேற்கொண்டிருக்க வேண்டும் என பயணிகள் குற்றம் சாட்டினர்.

# இசிஆரில் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பாக மாநகராட்சி நோட்டீஸ்

## மேல்முறையீடுகளை விரைந்து முடிக்க அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, பிப்.22:** இசிஆர் கடற்கரையையொட்டி விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பாக மாநகராட்சி அனுப்பியுள்ள நோட்டீஸை எதிர்த்து தொடரப்பட்டுள்ள மேல்முறையீடுகளை மேமாதத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் கெடு விதித்துள்ளது.

சென்னை கிழக்கு கடற்கரை சாலையான இசிஆரில் நீலாங்கரை முதல் உத்தண்டி வரையுள்ள பகுதிகளில் கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளுக்குப் புறம்பாக கடற்கரையில் இருந்து 500 மீட்டர் தூரத்துக்குள் கட்டப்பட்டுள்ள ரிசார்ட்டுகள் மற்றும் பங்களாக்களை இடிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இந்த வழக்குகளில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், 798 கட்டிடங்களின் உரிமையாளர்களுக்கு சென்னை மாநகராட்சி கடந்த 2018-ம் ஆண்டு நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

குறிப்பாக, தற்போதைய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவருமான கமல்ஹாசன் எம்.பி, தவெக தலைவரும், நடிகருமான விஜய் மற்றும் தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலருக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த வழக்கு 6 ஆண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் கிடந்த நிலையில், நீதிபதிகள் அனிதா சுமந்த், எம்.சுதீர்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, சென்னை மாநகராட்சியின் நோட்டீஸை எதிர்த்து 798 உரிமையாளர்களில் 440 பேர் அரசிடம் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், 84 மேல்முறையீடுகள் முடித்து வைக்கப்பட்டு விட்டதாகவும், எஞ்சிய மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளதாகவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நிலுவையில் உள்ள எஞ்சிய மேல்முறையீடுகள் குறித்தும் கட்டிட உரிமையாளர்கள் தரப்பில் விளக்கமளிக்க, மார்ச் 30 வரை அவகாசம் வழங்கி, மேல்முறையீட்டு மனுக்கள் மீது மே 31-க்குள் முடிவெடுக்க வேண்டும், என சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

அப்போது இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவ நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் தரப்பில், "சென்னையின் மிக நீண்ட கடற்கரை பகுதிகளில் அரிய வகை ஆமையினங்கள் இனப்பெருக்கம் செய்வதால் உத்தண்டிக்கு அப்பால் உள்ள கடற்கரை பகுதிகளிலும் உள்ள சட்டவிரோத கட்டுமானங்களைக் கணக்கெடுத்து அகற்ற உத்தரவிட வேண்டும்" எனக் கோரப்பட்டது. அதற்கு, அதுகுறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

# காமாட்சி அம்மன் கோயில் மாசித் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது!





**காஞ்சிபுரம், பிப்.22:** காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் மாசித்திருவிழா சனிக்கிழமை காலை(பிப்.21) கொடியேற்றத்துடன் தொடங்கியது.

மகாசக்தி பீடங்களில் ஒன்றான இக்கோயிலில் ஆண்டுதோறும் மாசித்திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். நிகழாண்டுக்கான மாசித்திருவிழா தொடக்க நிகழ்வையொட்டி காமாட்சி அம்மன் உருவம் பொறித்த கொடிப் பட்டம் ஆலயத்தின் சுற்றுப்புற வளாகத்தில் பல்லக்கில்வைத்து கோவில் ஸ்தானிகர்களால் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் அலங்கார மண்டபத்தில் இருந்து லட்சுமி சரஸ்வதி தேவியருடன் உற்சவர் காமாட்சி கொடிமரம் அருகே உள்ள மண்டபத்திற்கு எழுந்தருளினார். சிறப்பு தீபாராதனைகளும் நடைபெற்றன.

பின்னர் காமாட்சி அம்மன் உருவம் பொறித்த கொடியானது கோவில் தங்க கொடிமரத்தில் ஏற்றப்பட்டு கொடிமரத்துக்கு சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றன.

கொடியேற்றத்தின் போது வண்ண மலர்கள் தூவப்பட்டன. வாண வேடிக்கைகளும் நடைபெற்றன.

கொடியேற்ற விழா காஞ்சிபுரம் சங்கர மடத்தின் இளைய பீடாதிபதி சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

மாசித்திருவிழாவையொட்டி, நாள்தோறும் காலை,மாலை வெவ்வேறு வாகனங்களில் அம்மன் எழுந்தருளி நகரின் ராஜ வீதிகளில் வீதியுலா வரவுள்ளார்.


கொடியேற்ற விழாவில் காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மூத்த மேலாளர் ந. சுந்தரேச ஐயர், மேலாளர் அரவிந்த் சுப்பிரமணியன், காஞ்சி காமாட்சி சங்கரமட வரவேற்பு குழு ஒருங்கிணைப்பாளர் காஞ்சி. ஜீவானந்தம் உள்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கொடியேற்ற நிகழ்வு முடிந்தவுடன் வெள்ளி ரிஷப வாகனத்தில் அம்மன் ராஜ வீதிகளில் வீதியுலா வந்தார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான வெள்ளித் தேரோட்டம் மார்ச் 1 ஆம் தேதி நடைபெறுகிறது. மாாச் 4- ஆம் தேதி விஸ்வரூப தரிசனமும், அதனைத் தொடாந்து விடையாற்றி உற்சவமும் நடைபெறுகிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் ஸ்தானிகர்கள் சங்கர மடத்தின் நிர்வாகிகள் ஆகியோர் செய்து வருகின்றனர்.

# நவீன ரோபோடிக் அறுவை சிகிச்சை தொழில்நுட்பம்: போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் அறிமுகம்



**சென்னை, பிப்.22:** போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் சிக்கலான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக, நவீன ரோபோடிக் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளதாவது: ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், 'டா வின்சி எக்ஸ்ஐ அட்வான்ஸ்டு ரோபோடிக் சர்ஜிக்கல் சிஸ்டம்' என்ற ரோபோடிக் தொழில்நுட்ப கருவியின் பயன்பாட்டை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாசலம், துணை வேந்தர் மருத்துவர் உமா சேகர், இணை துணைவேந்தர் மருத்துவர் மகேஷ் வக்கமுடி, மருத்துவக் கல்லூரி தலைவர் மருத்துவர் கே.பாலாஜி சிங், பதிவாளர் மருத்துவர் எஸ்.செந்தில் குமார்.

மருத்துவ இயக்குநர் மருத்துவர் ஆர்.பி.சுதாகர் சிங், மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர் பி.சுரேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த ரோபோடிக் கருவியில் அறுவை சிகிச்சை நிபுணருக்கான கட்டுப்பாட்டு கன்சோல், நோயாளியின் பக்கத்தில் 3 முதல் 4 ரோபோடிக் கரங்களை கொண்ட கார்ட் மற்றும் 3டி எச்டி மற்றும் அறுவை சிகிச்சை நிபுணரின் கை அசைவுகளை உடனுக்குடன் துல்லியமாக பிரதிபலிக்க ஃபோர்ஸ் ஃபீட்பேக் உயர்தொழில்நுட்பம் உள்ளது.

சிக்கலான அறுவை சிகிச்சைகள் சாதாரண அறுவை சிகிச்சையுடன் ஒப்பிடுகையில் இந்த ரோபோடிக் தொழில்நுட்பத்தால் நோயாளிகள் விரைவாக குணமடையலாம்.

சிறிய அளவு காயங்கள், குறைந்த நோய் தொற்றுடன், மருத்துவமனையில் குறைந்த நாட்கள் இருப்பது போன்ற பலன்கள் கிடைக்கின்றன. புரோஸ்டேட் அகற்றுதல், கருப்பை அகற்றுதல், கொலோரெக்டல் அறுவை சிகிச்சை மற்றும் இதய மார்பு அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல சிக்கலான அறுவை சிகிச்சைகளை துல்லியமாக செய்வதற்கு பயன்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்- ஆர்ப்பாட்டம்: ரூ.1 கோடி வர்த்தகம் பாதிப்பு



**ராமேசுவரம், பிப்.22:** தமிழக மீனவர்கள் கடலுக்கு செல்லும்போதுஎல்லைதாண்டி வந்ததாக கூறி இலங்கை படையினர் அவர்களை சிறை பிடிப்பதும், பல நேரங்களில் தாக்கி விரட்டி அடிப்பதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த 16-ந்தேதி நெடுந்தீவு அருகே எல்லைதாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி காரைக்காலை சேர்ந்த 25 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் நடந்த ஒரு நாள் இடைவெளியில் 18-ந்தேதி மன்னர் வளைகுடா, நெடுந்தீவு கடல் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேசுவரம், மண்டபத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஒரே வாரத்தில் 47 தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்ட சம்பவம் மீனவ மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இலங்கை சிறையில் உள்ள 104 தமிழக மீனவர்களையும் 200-க்கும் மேற்பட்ட விசைப்படைகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசுக்கு கடிதம் மூலம் கோரிக்கை வைத்தார்.

இந்த நிலையில் ராமேசுவரம் உள்ளிட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி இன்று ஒரு நாள் ராமேசுவரத்தில் மீனவர்கள் வேலைநிறுத்த போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இன்று ராமேசுவரத்தில் இருந்து விசைப்படகு மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லவில்லை. இதன் காரணமாக 400-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்தன. வேலைநிறுத்தம் காரணமாக மீனவர்கள், மீன்பிடி தொழிலை சார்ந்தவர்கள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

வழக்கமாக வார இறுதி நாட்களில் மீன் வியாபாரம் களை கட்டும் நிலையில் வேலைநிறுத்தம் காரணமாக இன்று ராமேசுவரம் துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது. மேலும் ரூ.1 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி இன்று காலை தங்கச்சி மடம் வலசை பஸ் நிறுத்தம் முன்பு மீனவர் சங்கங்களின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் மற்றும் மீனவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மீனவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டனர்.

இது குறித்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மீனவர்கள் கூறுகையில், இலங்கை கடற்படையின் சிறைபிடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் ஒவ்வொரு முறையும் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் கடலுக்கு சென்று வருகிறோம்.

இதற்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் உடல், மனநலம் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளால் அவதி அடைந்து வருகின்றனர். எனவே அவர்களின் உடல்நலம் மற்றும் குடும்பத்தினரின் நிலையை கருதி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றனர்.

# சென்னையில் இன்று (22.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...



**சென்னை, பிப்.22:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் நாளை (22.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

அம்பத்தூர் தொழிற்பேட்டை: 1வது பிரதான சாலை, 3வது தெரு, தபால் அலுவலக சாலை தெற்கு கட்ட பிரிவு 1, எம்டிஎச் சாலை, 3வது பிரதான சாலை.

அம்பத்தூர் சிட்கோ: 5வது தெரு, யாதவா தெரு, ஈபி சாலை, கிராமம் தெரு, 4வது தெரு, 5வது தெரு, செக்டார் 3 வடக்கு கட்டத்தின் 6வது தெரு.




# தி.மு.க. கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட குழு அமைப்பு - துரைமுருகன் அறிவிப்பு



**சென்னை, பிப்.22:** தமிழக சட்டசபை தேர்தல் தேதி அடுத்த மாதம் அறிவிக்கப்படும் என எதிர் பார்க்கப்படும் நிலையில் கடந்த ஒரு மாத காலமாகவே அரசியல் களம் சூடுபிடித்து உள்ளது. ஆளும் கட்சியான தி.மு.க., எதிர்க்கட்சியான அ.தி.மு.க., நடிகர் விஜயின் த.வெ.க., நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், வி.சி.க., கம்யூனிஸ்டு கட்சிகள், ம.தி.மு.க.. இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளும், அ.தி.மு.க. அணியில் பா.ஜ.க., அ.ம.மு.க., பா.ம.க., த.மா.கா.. புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த டி.ஆர்.பாலு தலைமையில் குழு அமைத்து தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

டி.ஆர். பாலு தலைமையிலான குழுவில் கே.என்.நேரு, திருச்சி சிவா, ஆ.ராசா, ஆர்.எஸ்.பாரதி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தி.மு.க. சார்பில் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு குறித்த பேச்சுவார்த்தை நடத்துவதற்கான குழு அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணி கட்சிகளுடன் நாளை முதல் தொகுதி பேச்சுவார்த்தை நடைபெறும் என ஏற்கெனவே அறிவித்த நிலையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. ஆட்சி மீண்டும் தொடர ம.தி.மு.க. கேடயமாக இருக்கும் - வைகோ



**மதுரை, பிப்.22:** மதுரையில் ம.தி.மு.க. நிர்வாகி இல்ல திருமண விழாவில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டு பேசியதாவது:-

ம.தி.மு.க.வில் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். ஆனால் ம.தி.மு.க. தொண்டர்கள் ராணுவ உறுதி கொண்டவர்கள். கொண்ட லட்சியத்தில் உறுதியாக நடப்பவர்கள். எனவே ஒவ்வொரு கிராமங்களிலும் 10 பேர் ம.தி.மு.க.வினர் இருந்தாலும் அவர்கள் லட்சியம் மிக்க வீரர்களாக திகழ்வார்கள்.

தி.மு.க. என்ற திராவிட இயக்கம் வரலாற்று சிறப்பு மிக்கதாகும். தென்னாட்டில் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவரால் பாராட்டப்பட்ட இயக்கம் தி.மு.க. இந்த இயக்கம் வளர பசும்பொன் முத்துராமலிங்க தேவரும் பெரும் உதவியாக இருந்தார். அதுபோல தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வை வளர்க்க எனது கால் படாத இடமே இல்லை என்று சொல்லலாம்.

அந்த அளவுக்கு தி.மு.க.வின் வளர்ச்சியில் எனக்கும் பங்கு இருக்கிறது. எனவே இந்த ஆட்சி தொடர வேண்டும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சியை தமிழ்நாட்டில் தொடரும் வகையில் ம.தி.மு.க. கேடயமாக இருக்கும்.

வருகிற சட்டமன்ற தேர்தலில் எத்தனை இடங்கள் ம.தி.மு.க.வுக்கு என்பது முக்கியமல்ல. தி.மு.க. ஆட்சி தொடர வேண்டும் என்பது தான் எங்களது லட்சியம். அதனை கொண்டு வர கேடயமாக ம.தி.மு.க. இருக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கூட்டணி ஆட்சிக்கு வாய்ப்பு இல்லை. வருகிற சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றும். தி.மு.க. தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். எனவே பொதுமக்கள் திடீரென முளைக்கும் நடிகர்கள் கலை துறையில் முகத்தை காட்டி உங்களை வசியம் செய்ய நினைப்பார்கள். அவர்களுக்கு பண்பாடு இல்லை, லட்சியம் இல்லை வேலு நாச்சியார் போன்ற வரலாற்று தலைவர்களை தங்களது லட்சிய தலைவர்களாக சொல்லுவார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த தலைவர்களின் வரலாறு தெரியாது. எனவே அவர்களை நம்பி மக்கள் ஏமாந்து விட வேண்டாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ஊழல்கோட்டை திமுகவின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது..!- நயினார் நாகேந்திரன்



**சென்னை, பிப்.22:** தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

குடிநீர் வழங்கல் துறை ஒப்பந்தங்களில் 10% வரை லஞ்சம் பெற்று ரூ.1,020 கோடி ஊழல் புரிந்த புகாரில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் மீது வழக்கு பதிய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திமுக அமைச்சர் நேரு அவர்கள், அரசு வேலையை விற்று ரூ.888 கோடி ஊழல் புரிந்த புகார் மீதும் கூடிய விரைவில் வழக்கு பதிந்து, உண்மை வெளிக்கொணரப்படும் என்னும் நம்பிக்கையை இந்த நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்துகிறது.

மொத்தத்தில், மக்கள் வரிப்பணத்தை உறிஞ்சி, கமிஷனில் கொளுக்கும் #ALLFAIL திமுக அரசின் ஊழல் கோட்டை சுக்குநூறாக இடிந்து விழும் நாளுக்கான COUNTDOWN இன்றோடு தொடங்கிவிட்டது! கூடிய விரைவில்,

திமுக உடன்பிறப்புகளின் ஒட்டுமொத்த ஊழலும் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்டு, தமிழக மக்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்படும்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com